
JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர் 14 | இதழ் 04 | ஜூன் 2023 | ஆண்டு சந்தா ₹ 100

தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல்
உன் இலக்கை அடைய

## பிரயாசப்படு!



# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

**இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாகவோ தெரியப்படுத்துங்கள்.**

**30,000 வாலிபர்கள்** கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?




அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். Youth.jesusredeems.com என்ற website மூலமாக ஆன்லைன் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

**மேலும் தொடர்புக்கு 9750955547**

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,** நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
youth@jesusredeems.org | www.jesusredeems.com | youth.jesusredeems.com

*ஆசிரியர்:* மோகன் சி. லாசரஸ் *இணை ஆசிரியர்:* அவினாஷ்
*ஆசிரியர் குழு:* வயலா | ஜெயசீலன் | ரவி | வில்லியம் | ரேச்சல் | கிளாடிஸ் | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜாண்
*வடிவமைப்பு:* டேவிட்சன்

## உள்ளே...

4

10

20


22


32


## தலைவாசல்

# பிரயாசப்பட்டார்!









அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

யூத மார்க்கத்தை வைராக்கியமாக பின்பற்றி, கிறிஸ்து என்ற பெயரே இல்லாமல் செய்ய சவுல் பல முயற்சி எடுத்தார். தமஸ்குவுக்கு போகும் வழியில் உண்மையான தெய்வத்தை கண்டு மனம் மாறி, இயேசு கிறிஸ்துவே தேவன் என்று வைராக்கியமாய் கண்டங்களுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல பிரயாசப்பட்டவர் பவுல். இயேசுவின் நாமத்தை ஆசியா மைனர் மற்றும் ஐரோப்பியா கண்டங்களுக்கு கொண்டு சென்றவர். பல எதிர்ப்பு, பல சூழ்ச்சி, பல இன்னல்கள் மட்டுமின்றி ஜீவன் போகும் சூழ்நிலையிலும் சுவிசேஷத்திற்காக பவுல் பட்ட பிரயாசத்தை யாரும் மறுக்க முடியாது.

2 கொரி. 11:24-28 வரை உள்ள வசனத்தில் தான் கிறிஸ்துவுக்காக, சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக அவரின் பிரயாசத்தை பட்டியலிடுகிறார்.

யூதர்கள் 39 அடிகள் = ஐந்து முறை (195 Lashes)
மூன்று தரம் மிலாறுகளால் = அடிக்கப்பட்டேன் (Iron rod)
ஒரு முறை கல்லெறியுண்டேன்.
மூன்று தரம் கப்பற் சேதத்தில் இருந்தேன்.
கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்.
அநேகந்தரம் கப்பல் பிரயாணம் (ஓயாத கப்பல் பிரயாணம்)
ஆறுகளால் வந்த மோசங்கள்,
என் சுய (யூத ஜனம்) ஜனங்களால் வந்த மோசங்கள்,
அந்நிய ஜனங்களால் வந்த மோசங்கள்,
பட்டணங்களில் உண்டான மோசங்கள்,
வனாந்திரத்தில் உண்டான மோசங்கள்,
சமுத்திரத்தில் உண்டான மோசங்கள்,
கள்ள சகோதரரிடத்தில் உண்டான மோசங்கள்,
பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேக முறை கண் விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும் அநேக முறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இந்தேன் என்பதாக சொல்கிறார்.

இவையெல்லாம் சுவிசேஷத்தை அறிவிக்க முற்பட்டதினால் அவருக்கு வந்த இன்னல்கள். அத்தனை இன்னல்களிலும் சோர்ந்து போகாமல், பின் திரும்பாமல், பயப்படாமல், துணிந்து, எழுந்து, விரைந்து சென்று சுவிசேஷம் அறிவிக்க பிரயாசப்பட்டார் பவுல். அதுமாத்திரமல்லாமல், தான் சென்று சுவிசேஷம் அறிவித்த அத்தனை இடங்களிலும், பின் தொடர் பணியை செவ்வையாய் செய்ய பிரயாசப்பட்டவர் பவுல். இத்தனை இன்னல்களிலும், நேரத்தை வீணாக்காமல் ஆத்தும பாரம் தன்னை உந்தி தள்ளியதால், ஒவ்வொரு சபைக்கும் கடிதம் எழுதினார். அவை அனைத்தும் இன்று நிருபங்களாக நம்மை உயிர்பிக்கும் தேவ வார்த்தையாக வடிவெடுத்துள்ளது.

**பிரயாசத்திற்கு மறுபெயர் பவுல் என்றால் மிகையாகாது.**

அதே நேரம் இப்படி ஒரு மனிதனால் பிரயாசப்பட முடியுமானால், நாமும் முயற்சிக்கலாமே என்ற வைராக்கியமும், வாஞ்சையும் எழும்புகிறது.

**எனக்கன்பான வாலிபனே! தேவ இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை அறிவிக்க நீ எடுக்க போகும் உன் பிரயாசம் கடைசி கால எழுப்புதலுக்கு, நீ ஆற்றும் பங்கு!**

**"இயேசு என்னும் நற்செய்தியை சொல்ல பிரியமுடன் பிரயாசப்படு"**

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்






சாட்சி தொகுப்பு: ஜாய்லின் ஜான்

# அற்புதத்தின் மேல் அற்புதம்...

**ஒரு ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த சகோதரிக்கு, தேவன் வெளிப்பட்டு, முகம் முகமாய் சந்தித்து, அவர் பக்கமாய் திருப்பி இருக்கிறார். இது எப்படி நடந்தது என்று அவர்களே நம்மோடு அந்த அனுபவத்தை பகிர்ந்து கொள்கிறார்கள்.**

**உங்களைப் பற்றியும் உங்கள் குடும்பத்தைப் பற்றியும் சொல்லுங்களேன்?**

என் பெயர் ஜெகன்சி. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள புன்னைக்காயல் என்ற பகுதியில் திரு. ஜெகன், திருமதி பமிலா என்ற தம்பதியருக்கு மூத்த மகளாகப் பிறந்தேன். எனக்கு ஒரு தம்பி இருக்கிறான். நான் RC. கிறிஸ்தவ குடும்பத்தில் மிகவும் பக்தியாக வளர்க்கப்பட்டேன். நான் சிறுவயதிலிருந்தே தினமும் RC கோயிலுக்கு தவறாமல் செல்வேன். சிறுவயதிலிருந்து இயேசுவை விட மாதா மீது தான் அதிக பக்தி இருந்தது. யாராவது என்னை சபைக்கு கூப்பிட்டால் எனக்கு பிடிக்காது.

**சரி... மாதா மீது பக்தியாக இருந்த நீங்கள் எப்படி இயேசுவைத் தேட ஆரம்பித்தீர்கள்?**

நான் ஏழாம் வகுப்பு படிக்கும் போது, என் அம்மா 100 நாள் வேலைக்குப் போனார்கள். ஒரு நாள் இறந்தவர்களை புதைக்கிற இடத்தில், மண் சுமந்து போடுகிற வேலை செய்து கொண்டிருந்தார்கள். அன்றைக்கு மாலை வீட்டுக்கு வந்தவுடனே அவர்கள் கண்களுக்கு ஒரு கருப்பு உருவம் தெரிவதுபோல் இருந்தது. எங்கள் ஊரில் உள்ள ஒரு ஊழியக்காரர் வந்து அம்மாவுக்காக ஜெபம் செய்தபோது சில மாற்றங்கள் ஏற்பட்டது. அதன் பிறகு அம்மா, பக்கத்திலுள்ள ஒரு சபைக்கு என்னையும், தம்பியையும் அழைத்து சென்றார்கள். அப்பா எங்களுடன் வரவில்லை. நானும் விருப்பம் இல்லாமல் தான் சென்றேன். ஆறு நாள் RC கோயிலுக்குத் தான் போவேன். ஞாயிற்றுக் கிழமை மட்டும் வேறொரு சபைக்கு செல்வேன்.



**பழரசம், திராட்சை, பால்கோவாவிற்கு ஆசைப்பட்டு ஆலயத்திற்கு போவேன்.**



ஆராதனை முடிந்த பிறகு எனது அம்மா பழரசம், திராட்சை, பால்கோவா வாங்கித் தருவார்கள். இதற்கு ஆசைப்பட்டுத்தான் அம்மாவுடன் போவேன். இப்படி 6 நாள் மாதா கோயிலுக்கும், ஒரு நாள் ஆலயத்திற்குமாக சில மாதங்கள் போய்க் கொண்டிருந்தேன். எனது நண்பர்கள் 6 நாட்கள் வருகிறாய், ஏன் ஞாயிற்றுக் கிழமை மட்டும் RC கோவிலுக்கு வரமாட்டாய் என்று கேட்பார்கள். நான் வேறு ஆலயத்திற்கு போகிறேன் என்றதும் 'Fatherரிடம் சொல்லச் சொன்னார்கள். நானும் போய் சொன்னேன். உடனே அவர்கள் ''கத்தோலிக்க திருச்சபையிலிருந்து எந்த சலுகையும் வேண்டாம்'' என்று எழுதி கொண்டு வா என்று சொன்னார்கள். நானும் எழுதி கொடுத்து விட்டு, தொடர்ந்து அம்மாவுடன் ஆலயத்திற்கு போக ஆரம்பித்தேன்.

**சரி நீங்கள் RC கோயிலுக்கு போகவில்லை... ஆவிக்குரிய சபைக்கு சென்ற பின்பு உங்கள் வாழ்க்கையில் வந்த மாற்றம் என்ன?**

Sunday கிளாஸ்க்கு தொடர்ந்து போக ஆரம்பித்தேன். என் ஜெப வாழ்க்கை வளர ஆரம்பித்து, எப்படி ஜெபம் செய்ய வேண்டும் என்று தெரிந்தது. எங்கள் பெரியம்மா வீட்டில் குடும்ப ஜெபத்தில் கலந்துக் கொள்வேன். அவர்கள் மற்றவர்களுக்காக ஜெபம்

செய்கிறதைப் பார்த்து, நானும் எங்கள் வீட்டில் அம்மா, தம்பியை அழைத்து குடும்ப ஜெபம் செய்ய ஆரம்பித்தேன். நாங்கள் ஒரு குடிசை வீட்டில் தான் வாழ்ந்து வந்தோம். அந்த வீட்டில் பாத்ரூம் வசதிக்கூட இல்லை. நான் ஒரு நாள், இயேசப்பா எங்களுக்கு ஒரு பாத்ரூம் கட்டித்தாங்க என்று சிறியதாக ஒரு ஜெபம் செய்தேன். இயேசப்பா என் ஜெபத்தைக் கேட்டு ஒருவர் உதவியோடு பாத்ரூம் கட்டிக் கொடுத்தார்கள். வெள்ளம் வந்தால் எங்கள் வீட்டுக்குள் தண்ணீர் வந்து விடும். எங்களால் வீட்டுக்குள் இருக்க முடியாது. அந்த நேரம் எங்கள் பாட்டி வீட்டுக்குத் தான் போவோம். இந்த நிலையில் நான் இயேசப்பாவிடம், எங்களுக்கு ஒரு சின்ன வீடு கட்டித்தாங்க என்று ஜெபம் செய்தேன். அந்த ஜெபத்தைக் கேட்டு, அரசாங்கத்தின் உதவியோடு தேவன் ஒரு அழகான வீட்டைக் கட்டிக் கொடுத்தார். இன்னும் பல தேவைகளை தேவன் சந்தித்தார். அதன் பிறகு தான் ஞானஸ்நானம் எடுத்தேன்.

**சூப்பர்... ஜெபிக்க, ஜெபிக்க இயேசு பல அற்புதங்களை செய்திருக்கிறார்... தொடர்ந்து உங்களது ஜெப வாழ்க்கை எப்படி இருந்தது?**

12ம் வகுப்பு தேர்வு முடிந்த பின்பு, நான் நர்சிங் படிக்க ஆசைப்பட்டேன். ஆனால் என்னால் படிக்க முடியவில்லை. வீட்டு கஷ்டத்தின் நிமித்தம் ஒரு கம்பெனியில் வேலை செய்தேன். வேலைக்கு போக ஆரம்பித்ததிலிருந்து என்னுடைய ஜெப வாழ்க்கை குறைய ஆரம்பித்தது. வேலை முடிந்து வாகனத்தில் வரும் போது சினிமா பாடல்களுக்கு நடனம் ஆடுவேன். சினிமா பாட்டு பாடுவேன். 2021ம் ஆண்டு நவம்பர் 13வது நாள் எனது அப்பாவுக்கு இரவெல்லாம் விக்கல் வந்துக் கொண்டிருந்தது. விக்கல் அதிகமாக இருந்ததால் நெஞ்சு வலி ஏற்பட்டது. அவர்களால்



அந்த வலியைத் தாங்க முடியாமல் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு ஸ்கேன் பண்ணி பார்த்த போது அதிக மதுபானம் குடித்ததினால் தான் இந்த பிரச்சனை வந்திருக்கிறது என்று சொன்னார்கள். மாத்திரை சாப்பிட்டும் சரியாகவில்லை. நான் மருத்துவமனையில் இருந்து அப்பாவுக்கு ஜெபம் செய்தேன். நான் ஜெபம் செய்துக் கொண்டிருக்கும் போது நான் செய்த பாவம் என் கண் முன்பாக வந்து நின்றது.

உடனே நான் இயேசப்பாவிடம், இனி சினிமா பாடல்களைப் பாடமாட்டேன், நடனம் ஆட மாட்டேன் என்று என்னை ஒப்புக்கொடுத்து ஜெபித்தேன். அப்பாவுக்கு சாப்பிட கொடுக்கிற ஒவ்வொன்றையும் ஜெபம் செய்து கொடுக்க ஆரம்பித்தேன். இப்படியே இரண்டு வாரம் கடந்தது. ஒரு நாள் இரவில் நாங்கள் குடும்பமாக ஜெபம் செய்தோம். அந்த ஜெப நேரத்தில் என் அப்பாவிடம், ‘இனி குடிக்க மாட்டேன்’ என்று ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள் என்று சொன்னேன்! அப்படியே அவங்களும்



ஒப்புக்கொடுத்தார்கள். மறுநாள் விக்கல் வரவில்லை. தேவன் எங்கள் ஜெபத்தைக் கேட்டு அப்பாவுக்கு அந்த பெலவீனத்திலிருந்து விடுதலை தந்தார். ஒரு வருடமாக நாங்கள் குடும்பமாக சபைக்கு சென்று வருகிறோம். ஒரு வருடமாக எனது அப்பா குடிபழக்கத்தையும் விட்டு விட்டார்.

**சரி... அற்புதத்தின் மேல் அற்புதம்... உங்களுக்கும் தேவனுக்கும் உள்ள உறவில் எப்படி இருக்கிறீர்கள்?**

நான் வேலைக்கு வாகனத்தில் போகும் போது, சினிமா பாடல்களைக் கேட்டால் பாட தோன்றும். ஆனால் நான் இயேசப்பா என்று சொல்லிக் கொண்டே இருப்பேன். பிப்ரவரி 16ம் தேதி என் சரீரத்தில் பெலவீனம் ஏற்பட்டு, மூச்சுவிட முடியாமல், தூங்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். எனக்குள் மரண பயம் வந்தது, நான் Youtubeல் ஒரு சீரியலுக்கு அடிமையாக இருந்தேன். நான் ஒப்புக்கொடுத்திருந்தாலும் சீரியல் பார்ப்பதை என்னால் விடமுடியவில்லை.

என் சரீரம் மிகவும் பெலவீனமாக இருந்ததால் அற்புத விடுதலை பிரார்த்தனை ஜெபத்திற்கு சென்று ஜெபிக்க, ஜெபிக்க சில மாற்றங்கள் ஏற்பட்டது. நான் இனி சீரியல் பார்க்க மாட்டேன் என்று ஒப்புக் கொடுத்தேன். கர்த்தர் விடுதலைக் கொடுத்தார். 2022 ஜுன் மாதம் 3 நாட்கள் நடைபெற்ற முகாமின் முதல் நாள் இரவு ஜெபத்தில் என்னை முழுமையாக ஒப்புக்கொடுத்து ஜெபித்த போது, ஒரு இருதயம், அதில் நெருப்பு சிவப்பு நிறத்தில் இருதய வடிவத்தில் தெரிந்தது. ஒருவர் என்னோடு பேசுகிற உணர்வை உணர்ந்தேன். ‘‘உன்னுடைய இருதயம் என்னுடைய இருதயமாக மாறிவிட்டது’’ என்று சொன்னார். என்னுடைய பாவங்கள் என்னை விட்டு வெளியேறுவதை உணர்ந்தேன்.

இரண்டாவது நாள் நடந்த ஜெபத்தில் ‘யாருக்கு என்ன அழைப்பு என்று தேவன் வெளிப்படுத்துவார்’ என்று சொன்னார்கள். என்னைக் குறித்து என்னத்திட்டம் வைத்து இருக்கிறீர்? எனக்குரிய அழைப்பு என்ன என்று வெளிப்படுத்தும்படியாக ஜெபித்தேன். ஜெப வேளையில் நான் சில தரிசனங்களைப் பார்த்தப் பின்பு, பவுலுக்குரிய அழைப்பு என்று மேடையிலிருந்து ஊழியக்காரர் சொன்னார். நான் முன்னால் போக வேண்டாமென்று பயந்து கீழே அமர்ந்து விட்டேன். சிலர் வராமல் அங்கேயே அமர்ந்து இருக்கிறீர்கள், தேவ தூதர்கள் உங்கள் கரங்களைப் பிடித்துக் கொண்டு வரப் போகிறார்கள் என்று ஊழியக்காரர் சொன்னார். சொன்னவுடன் என் கரங்களை இரண்டு பேர் இழுத்துக் கொண்டு போவது போன்று இருந்தது. கண்களைத் திறந்து பார்த்த போது, நான் முன்பாக நின்று கொண்டிருந்தேன். முன்பாக வந்தவர்கள் அனைவருக்கும் பவுலுக்குரிய அழைப்பு என்று சொன்னார்கள். தேவன் எனக்கு பவுலுக்குரிய அழைப்பை தந்தார்.

**சூப்பர்... பவுலுக்குரிய அழைப்பைப் பெற்ற நீங்கள்... இப்பொழுது என்ன செய்கிறீர்கள்?**

நாங்கள் மூன்று பேராக கூடி ஜெபித்து தேவனுக்காக ஊழியம் செய்ய ஆரம்பித்தோம். கைப்பிரதி கொடுப்பது, Prayer Walk செல்வது, வியாதிப்பட்டவர்கள் வீட்டுக்கு போய் ஜெபம் செய்வது, சண்டே கிளாஸ் எடுப்பது, இயேசுவை அறியாத பிள்ளைகளுக்கு இயேசுவைப் பற்றி சொல்லி கர்த்தருக்குள் வழிநடத்துவது என இயேசுவுக்காக பல ஊழியங்கள் செய்தேன்.

ஆனால் மொபைல் அடிமைத்தனத்திலிருந்து என்னால் வெளிவரமுடியவில்லை. முகாம் முடிந்த பிறகு என் ஜெப நேரம் அதிகரித்தது. ஜெபத்தில் அதிக நேரம் இயேசப்பாவுடன் இருப்பேன். ஆனால் மொபைல் பார்ப்பதை விடமுடியவில்லை. Charge போட்டு Use பண்ணுவேன். திரும்ப திரும்ப Status பார்ப்பேன். இப்படி இருக்கும் போது முகாம் முடிந்த ஒரு மாதத்தில் என் மொபைலை நான் பயன்படுத்த முடியாதபடி ஆகிவிட்டது. வீட்டில் மொபைல் வாங்கி தரவில்லை. மொபைல் வேண்டும் என்று இயேசப்பாவிடம் ஜெபம் செய்தேன். ஆனால் மொபைல் கிடைக்கவில்லை. அதன் பிறகு மொபைல் மீது வெறுப்பு வந்தது. அந்த மொபைல் அடிமைத்தனத்திலிருந்து தேவன் முற்றிலுமாக விடுதலை தந்தார். 9 மாதங்களாக என்னிடம் மொபைல் இல்லை. இப்பொழுது வீட்டில் இருக்கும் பட்டன் மொபைலை வைத்து Conferance Prayer பண்ணுகிறேன்.



சகோதரி ஜெகன்சி தன் குடும்பத்தாருடன்

மனிதர்களுடைய பார்வையில் சிறியவளாகவும், அற்பமாகவும் இருந்த என்னை தேவன் உயர்த்தி அவருடைய ஊழியத்தை செய்ய வைத்துக் கொண்டு இருக்கிறார். இப்பொழுது நான் என் ஊரில் உள்ள ஒரு Browsing Centreஇல் வேலை பார்க்கிறேன். அங்கு வருகிற ஒவ்வொருவருக்கும் இயேசுவைப் பற்றி சொல்கிறேன். தினமும் இரவில் Conferance Callல் ஜெபம் செய்து வருகிறேன். யார் என்னை அழைத்தாலும், அவர்களுக்கு போய் ஜெபம் செய்கிறேன். இப்போது நான் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதியாய் இருக்கிறேன்.

**சூப்பர்... ஆண்டவர் உங்களை பயன்படுத்தும் விதத்தை பார்க்கும் போது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. சரி... வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

‘வாலிபப் பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை’ என்று வேதம் சொல்கிறது. ஆனால் நாம் நம் சிருஷ்டிகராகிய ஆண்டவரை தேடாதபடிக்கு பிசாசு நம்மை பாவ வலையில் சிக்க வைக்க அநேக சோதனைகளைக் கொண்டு வருவான். அவை அனைத்தினின்றும் தப்பித்துக் கொள்ள ஒரே வழி கர்த்தருடைய சமூகத்தில் அமர்ந்து அவருடைய வேதத்தில் பிரியமாயிருந்து அவர் வார்த்தைகளை தியானிப்பதே. இந்த உலக சிற்றின்பங்கள் உங்களை அடிமையாக்காதபடி, ஆவியின் பட்டயத்தைக் கொண்டு அவைகளை மேற்கொண்டு, தேவனுக்காக வைராக்கியமாக எழும்புங்கள், ஜெபத்திலே தரித்திருங்கள். என் வாழ்வில் எண்ணற்ற அற்புதங்களைச் செய்த தேவன் உங்களுக்கும் செய்ய வல்லவராக இருக்கிறார்.

**அன்பான வாலிபர்களே! சினிமாவுக்கும், சீரியலுக்கும் அடிமைப்பட்டிருந்த சகோதரி ஜெகன்சியைக் கர்த்தர் பிரித்தெடுத்து இன்றைக்கு அவர்களைக் கொண்டு ஒரு பெரிய சேனையை எழுப்பி வருகிறார். நீங்களும் கூட இந்த சகோதரியைப் போல பல பாவ அடிமைத்தனங்களில் சிக்கி இருக்கிறீர்களா? இன்றைக்கு ஒப்புக் கொடுங்கள்! விடுதலையைப் பெற்றுக் கொள்வீர்கள்! நீங்களும் ஒரு ஸ்தானாதிபதியாக மாறலாமே!**

புதிர்: ஜான்சி வில்லியம்

# வேதாகம புதையல் வேட்டை

**கீழே சில தகப்பன்மார்களைக் குறித்த கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. அவர்கள் யார் என்று கண்டுபிடித்து வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

1. வேதத்தில் 16 பெண் பிள்ளைகளை பெற்ற தகப்பன் யார்?

2. தன்னை கொல்ல நினைத்த மகன் செத்து போனானென அறிந்து புலம்பி அழுத அன்பு தகப்பன் யார்?

3. ஒரு பட்டணத்தைக் கட்டி அதற்கு தன் மகன் பெயரைத் தரித்த தகப்பன் யார்?

4. தன் மகனுக்காக பெரிய விருந்து பண்ணின தகப்பன்மார் யார் யார்?

5. எந்த தகப்பனுடைய ஜீவன் தன் மகனுடைய ஜீவனோடு ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தது?

6. வேதத்தில் முதல் இரட்டை குழந்தைப் பெற்ற தகப்பன் யார்?

7. தன் மகனைக் கொல்ல வந்தவர்களிடமிருந்து அவனை காப்பாற்றிய தகப்பன் யார்?

8. சாலொமோன் எருசலேமில் கட்டின ஆலயத்தில் ஆசாரிய பணிவிடையைச் செய்தவனின் தகப்பன் யார்?

9. தன் தகப்பனுக்கு முதற் பிறந்தவனாயிருந்தும் கோத்திரத்து அட்டவணையில் அவன் முதல் பிறந்தவனாக எண்ணப்படாமல் அவனுடைய சேஷ்ட புத்திர சுதந்திரம் அவன் தகப்பனின் மற்றொரு குமாரனுக்கு கொடுக்கப்பட்டது? அந்த தகப்பன் பெயர் என்ன?

10. செய்கைகளில் வல்லவனும் இரண்டு வலுமையான சிங்கங்களைக் கொன்றதுமல்லாமல், உறைந்த மழை காலத்தில் இறங்கி போய் ஒரு கெபிக்குள் இருந்த ஒரு சிங்கத்தையும் கொன்று போட்டவனின் தகப்பன் யார்?

கடந்த மாத வெற்றியாளர்
சகோதரி **இவாஞ்சலின்** (தூத்துக்குடி)
அவர்களை வாழ்த்துகிறோம்.




**கடந்த மாத விடைகள்**

1. பாலாக்
2. அபிகாயில்
3. ஸ்தேவான்
4. கிதியோன்
5. ஐத்திகு

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.06.2023**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org




ஆலோசனை: அலி

# எனது விருப்பம் நிறைவேறுமா?

**நான் 12ம் வகுப்பில் நல்ல மதிப்பெண்களுடன் வெற்றி பெற்றேன். Visual Communication எடுத்து படித்து மீடியாவில் சாதிக்க வேண்டும் என்பதே எனது ஆசை. ஆனால் எனது பெற்றோர் மீடியா வேண்டாம், Computer Science தான் படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தி என்னை அதில் சேர்த்தார்கள். என் பெற்றோரின் வற்புறுத்துதலினால் நான் அட்மிஷன் போட்டேன். எனக்கு பிடிக்காத ஒன்றைப் படிக்க சொல்கிறார்கள். எனக்கு கல்லூரிக்கு போகவே விருப்பமில்லை. ஆனால் எனக்கு மீடியாவில் புதிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதே விருப்பமும் ஆசையுமாக இருக்கிறது. எனக்கு பிடிக்காத படிப்பை எடுத்து படிக்கலாமா? அல்லது எனக்கு பிடித்த Course எடுத்து படிக்க வேண்டுமா? என் குழப்பத்திற்கு விடை கிடைக்குமா? - ரஞ்சினி, திருச்சி.**

அன்பு சகோதரி! உங்களின் உள்ளான வேதனையும், பிடித்த படிப்பை படிக்க முடியவில்லையே என்ற வருத்தமும் நன்கு புரிகிறது. உங்கள் கனவு கலைந்து விட்டதே என்ற மன உளைச்சல், மாறாத காயமாக உங்கள் உள்ளத்தில் இருப்பதை உணர முடிகிறது.

'உங்கள் ஆசைக்கும், கனவுக்கும் வாய்ப்பு கொடுக்கப்படவில்லையே' என்ற வேதனையையும் என்னால் உணர முடிகிறது. ரஞ்சினி, உங்களின் கனவை பெற்றோரால் புரிந்துக் கொள்ள முடியவில்லை என்பதை அறிந்துக் கொண்டேன். அநேக நேரம் பெற்றோர் நமது நன்மைக்கே பல காரியங்களைச் செய்தாலும், சில நேரம் படிப்பு என்று வரும் போது அவர்களுடைய விருப்பமே நிறைவேற்றப்படுகிறது.

ரஞ்சினி! உங்களுக்கு இரண்டு வழிகள் இருக்கிறது. ஒன்று, அய்யோ என் கனவு கலைந்து விட்டதே என்று சோர்ந்து போய் BSc Computer Science படிப்பை சரியாக படிக்காமல் தவறி, படிப்பின் மேல் ஆசையை இழந்து, உங்கள் வாழ்க்கைக்கான உயரத்தை அடையாமல் போகலாம். இரண்டாவது, இதை ஒரு சவாலாக எண்ணி BSc Computer Science படிப்பை திறம்பட முடித்து, பெற்றோரையும் சந்தோஷப்படுத்தி, பின்னர் உங்கள் கனவையும் தொடரலாம்.

ரஞ்சினி! உங்கள் பெற்றோர் சந்தோஷமாக இருக்கும் போது, உங்களின் ஆசையையும், கனவையும் எடுத்து சொல்ல முற்படுங்கள். ஒருவேளை அவர்கள் காது கொடுத்து கேட்டால், உங்கள் Visual Communication படிப்பை படிக்க வாய்ப்பு உண்டு, இல்லையென்றால் வேறு ஒரு வழி உண்டு.

விரும்பிய காரியம் அல்லது ஆசைப்பட்ட படிப்பு கிடைக்கவில்லையே என்று முடங்கிய வாலிபர்கள் அநேகர் உண்டு. ஆனால் கிடைத்த படிப்பை நன்கு படித்து, பின்னர் தங்களுக்கு விருப்பமான படிப்பை தொடர்ந்த அநேக வாலிபர்களும் உண்டு. எனவே நீங்கள் தீர்மானம் எடுக்க வேண்டிய முக்கியமான தருணம் இது. உங்களின் தீர்மானமே கனவை அடைய வழிவகுக்கும்.

## BSc Computer Science படிப்பை தவிர்த்தால் என்ன நேரிடும்?



பிடித்த Course படிக்க முடியவில்லையே என்ற வருத்தம் உங்களை முடக்கி, படிப்பின் மேல் ஒரு வெறுப்பை அளிக்கலாம்.



அந்த வெறுப்பு கல்லூரிக்கு செல்வதை தவிர்த்து படிப்பை வெறுக்க வழிவகுக்கும். முடிவு படிப்பில் பல தோல்விகளை காண வாய்ப்பு உண்டு.




நீங்கள் தற்பொழுது உணர்வது போல, கல்லூரிக்கு செல்லாமல் Lack of Attendance ஏற்பட்டு, நீங்கள் செமஸ்டர் தேர்வு எழுத முடியாத அளவிற்கு கொண்டு போகலாம்.



நீங்கள் சரியாக படிக்கவில்லை என்றால் நல்ல Performance இருக்காது. இதனால் உங்கள் எதிர்காலம் பாதிக்க வாய்ப்பு உண்டு. Campus Interview போன்ற காரியங்களில் பங்கு பெறவோ, தேர்ச்சி பெற்று ஒரு உயர்ந்த பதவிக்கோ செல்ல முடியாமல் போகலாம்.



இதனால் வீட்டில் தேவையில்லாத பிரச்சனையும், குழப்பமும் நிலவும்.

**இப்படி நீங்கள் செய்யும் போது,
உங்கள் உயர்வையும்,
உங்கள் கனவையும் ஒருவராலும் மறுக்கவோ,
தடுக்கவோ முடியாது.**

## ஒருவேளை BSc படிப்பை படிக்க தொடர்ந்தால் ஏற்படும் நன்மைகள்...



பெற்றோரின் சந்தோஷத்தோடு ஒரு டிகிரியை படித்து முடிக்கலாம்



BSc Computer Science நன்கு படித்ததால், Computer Applications Expertஆக முடியும்.




இந்த Applications Expertஆன நீங்கள், Visual Communication படிப்பில் 3D Designing, Illustrator, Photoshop படிக்கும் போது அதில் Excellentஆக வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது.



பின்னர் Second Degreeஆக உங்கள் கனவு படிப்பான Visual Communication படிப்பை தொடரலாமே. காரணம் உங்களின் ஒரு கீழ்ப்படிதல் உங்கள் பெற்றோரின் மனதை மாற்ற வாய்ப்பு உண்டு.



ஒருவேளை BSc Computer Science படிப்பு முடித்து ஒரு சிறந்த வேலையில் அமர்ந்தவாறே, Visual Communication Distance Educationல் முயற்சி பண்ணலாம்.



உங்கள் கனவு படிப்பிற்கு நீங்களே Fees கட்டுகின்ற அளவிற்கு சொந்த காலில் நின்று படிக்கலாம்.



**YOU DO YOUR BEST - GOD WILL DO THE REST**

**இந்த BSc Computer Science படிப்பை ஆசையாக படிக்க தேவன் உதவி செய்வார். பிடித்த காரியத்தை செய்ய மனம் இருக்கும். ஆனால் பிடிக்காததை செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இருப்பதால், அதை செய்வதற்கு ஒரு உதவி தேவை, அதை இயேசு கிறிஸ்து தருவார்.**

**உங்களையும் ஒரு சாதனையாளராக, மீடியா துறையில் ஒரு நட்சத்திரமாக ஜொலிக்க செய்வார்! ஜெபித்து செயல்படுங்கள்!**

# பிரயாசப்படு!

Make an effort!

Work Hard



முகப்பு செய்தி:
சதீஷ்

ஒரு குழந்தை தவழ்வதிலிருந்து தன் வாழ்வின் இலக்கை அடையும் வரை அனைத்து காரியங்களிலும் முயற்சி என்ற மூலதனம் தேவை. இன்பமும், துன்பமும், ஏற்றமும், இறக்கமும் நிறைந்த நம்முடைய வாழ்க்கையில் எந்தவொரு காரியத்திலும் பிரயாசப்படாமல் பலனை எதிர்பார்க்க முடியாது. எண்ணிலடங்காத சோதனைகள் வந்துக் கொண்டிருந்தாலும், சோதனையை தன் முயற்சியால் வென்று சாதிப்பவனே இறுதியில் சாதனையாளனாக மாற முடியும்.

விளையாட்டுத் துறையில் எப்படியாவது சாதித்துவிட வேண்டும் என்ற கனவுகளுடன் பல விளையாட்டுப் போட்டிகளில் கலந்து இறுதியாக தான் சாதிப்பதற்கு கூடைப்பந்து விளையாட்டை தேர்வு செய்தான் மைக்கேல் ஜோர்டான். கூடைப்பந்து போட்டியில் சிறப்பாக விளையாடி தன் திறமையை வளர்த்து கொண்டு, தன்னுடைய பள்ளி சார்பாக மாவட்ட அளவில் விளையாடும் வீரர்களின் பட்டியலில் தன் பெயரும் இருக்கும் என்ற பெரும் கனவுடன் காத்திருந்தார். பெயர் பட்டியலில் தன்னுடைய பெயர் இல்லாததைக் கண்டு சோர்ந்து போகாமல் அடுத்த வருடம் மாவட்ட அளவில் விளையாடுவதற்கு எப்படியாவது சென்றுவிட வேண்டும் என்று இரவு பகல் பாராமல் கடுமையாக முயற்சி செய்து விளையாட ஆரம்பித்தார். இந்த வருடம் எப்படியும் பெயர் பட்டியலில்




தன்னுடைய பெயர் வந்து விடும் என்று ஆசையுடனும், கனவுடனும் இருந்த அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. தன்னுடைய பயிற்சியாளரிடம் சென்று, மாவட்ட அளவில் விளையாடுவதற்கு ஏன் என்னை தேர்வு செய்யவில்லை? என்று கேட்டபோது, சீனியர் பிரிவில் விளையாடுவதற்கு ஏற்ற உயரம் உனக்கு இல்லை என்று சொல்லி நிராகரித்து விட்டார். பெரும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய ஜோர்டன் அவருடைய தாயாரின் ஆலோசனைக்கு செவிகொடுத்து பள்ளியில் ஜூனியர் பிரிவில் சேர்ந்து விளையாட ஆரம்பித்தார்.

தன்னுடைய கடுமையான முயற்சியால் ஜூனியர் பிரிவில் நட்சத்திர விளையாட்டு வீரனாக மாறினார். அதையும் தாண்டி தன்னுடைய உயரத்தை அதிகரிப்பதற்கான அனைத்து பிரயாசங்களையும் எடுத்தார். தனது கனவு நிறைவேற அவர் எடுத்த எல்லாப்



பிரயாசங்களும் பலன் தர ஆரம்பித்தது. மாவட்டம், மாநிலம் மற்றும் சர்வதேச போட்டிகளில் விளையாடி கூடைப்பந்து போட்டியில் (NBA) கொடிகட்டி பறக்க ஆரம்பித்தார். தன் தாயாருடைய ஆலோசனைக்கு அவர் செவி கொடுத்து பிரயாசப்பட்டதினால்தான், கூடைப்பந்து விளையாட்டு உலகில், இன்று வரை முன்னணி வீரனாக பேசப்பட்டு வருகிறார். இன்றைக்கும் அநேக வாலிபர்கள் தங்களுடைய வாழ்வில் சாதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்களே தவிர, முன்னேற்றம் அடைவதற்கு எந்தவொரு பிரயாசமும் எடுப்பதில்லை. **"பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும்" (2 தீமோ. 2:6)** என்று வேதம் சொல்கிறது. எவர்கள் தங்களுடைய வாழ்வில் முன்னேறுவதற்கு பிரயாசப்படுகிறார்களோ, அவர்களே வெற்றி என்னும் கனியை ருசி பார்க்க முடியும். உங்களுடைய வாழ்க்கையில் எந்தவொரு காரியம் ஆனாலும் சரி, நீங்கள் பிரயாசப்படாமல் வெற்றியை எதிர்பார்க்க முடியாது.

மனுஷன் தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருப்பது தேவன் அவனுக்கு அளிக்கும் அநுக்கிரகம். ஒருமுறை பேதுரு இராமுழுவதும் பிரயாசப்பட்டு மீன் ஒன்றும் அகப்படாமல் வெறுமையாய் இருக்கும் போது இயேசு பேதுருவை நோக்கி, **"...ஆழத்திலே தள்ளிக் கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்" (லூக்கா 5:4-5).** பேதுருவும் அவனுடன் இருந்தவர்களும் தங்களுடைய அனுபவம் மற்றும் சுயபெலத்தை நம்பி மீன்களை பிடிக்க பிரயாசப்பட்டபொழுது ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் ஆண்டவருடைய வார்த்தையை நம்பி அவரைச் சார்ந்து, அவர்கள் தங்களுடைய வலைகளைப் போட்ட போது, திரளான மீன்களைப் பிடித்தார்கள்.

இதைத்தான் நம்முடைய வேதம் சொல்கிறது, **"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" (நீதி. 3:5-6).** ஒருவேளை உங்களுக்கு தேவனுடைய ஆலோசனைகள் புரியாமலும், நம்ப முடியாமல் இருந்தாலும் தேவனுடைய வார்த்தையை சந்தேகப்படாமல் கீழ்ப்படிந்து அப்படியே செய்யும்போது நீங்கள் எடுக்கிற எந்த பிரயாசமும் வீணாய் போகாது. ஆனால் நீங்கள் உங்களுடைய ஞானம், அனுபவம், தாலந்து இவைகளை நம்பி தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் போனால், எவ்வளவு பிரயாசப்பட்டாலும் அதின் பலனை நீங்கள் பார்க்க முடியாது. யோசுவாவின் தலைமையில் கானானை நோக்கி புறப்பட்ட இஸ்ரவேலர்கள் ஆயி பட்டணத்தை வேவு பார்த்துவிட்டு



வந்து இப்பட்டணம் சிறிய பட்டணம் நாம் அனைவரும் போய் யுத்தம் செய்ய வேண்டியதில்லை. இரண்டாயிரம், மூவாயிரம் பேர் போனாலே போதும் அவர்களை எளிதில் ஜெயித்து விடலாம் என்று, தங்களுடைய அனுபவம், ஞானம், சுயபெலத்தை நம்பி யுத்தத்திற்கு போனதால் பெரும் தோல்வியைக் கண்டனர். ஆண்டவரின் வார்த்தையை நம்பி வலையைப் போட்ட பேதுருவுக்கு திரளான மீன்கள் கிடைத்தது. தங்களுடைய சுய பெலத்தையும், அனுபவத்தையும் நம்பி போன இஸ்ரவேலருக்கு மிஞ்சியது தோல்விதான்.

**எனக்கன்பான வாலிபர்களே! உங்களின் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணங்கள் மட்டும் இருந்தால் போதாது. அந்த எண்ணங்கள் நிறைவடைய நீங்கள் கர்த்தருக்குள் பிரயாசப்பட வேண்டும். உங்களுடைய படிப்பு, வேலை, எதிர்காலம் இவை எல்லாவற்றிலும் உங்களுடைய சுயபெலத்தை நம்பி பிரயாசப்படாமல், ஆண்டவராகிய இயேசுவின் வார்த்தையை கேட்டு அதன்படி நடக்கும்போது வெற்றியைக் காண்பீர்கள்.**



# வெட்கப்படுவதில்லை!



செய்தி: மோகன் சி. லாசரஸ்

**"...இனி யாக்கோபு வெட்கப்படுவதில்லை; இனி அவன் முகம் செத்துப்போவதுமில்லை." (ஏசாயா 29:22).**

நான் வெட்கப்பட்டு போய்விடுவேனோ! தேவன் கொடுத்த வாக்கு நிறைவேறுமோ? நிறைவேறாதோ? இந்த சூழ்நிலையைப் பார்த்தால் எனக்கு ஏதாவது நடந்து நான் வெட்கத்திற்குள்ளாகி விடுவேனோ? என்று நீங்கள் கலங்குகிறீர்களா? என் மகனே, என் மகளே! இனி நீ வெட்கப்படுவதில்லை என்று கர்த்தர் சொல்கிறார்.

**"உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்;..." (ஏசாயா 61:7).** நீ வெட்கப்பட்டு செத்த முகத்தைப் போல குனிந்து நிற்க வேண்டிய சூழ்நிலை வராது. உன் வெட்கத்திற்கு பதிலாக இரண்டத்தனையானப் பலனைக் கொடுத்து ஆசீர்வதிப்பார். ''என் ஆண்டவர் வாக்குக்கொடுத்தபடி தீங்கை எல்லாம் மாற்றி, இரண்டு மடங்கு ஆசீர்வதித்து விட்டார்'' என்று நீங்கள் மகிழ்ச்சியோடு சொல்லும் அளவிற்கான ஆசீர்வாதத்தை தேவன் உங்களுக்கு கொடுக்க விரும்புகிறார். 'யோபுவின் சிறையிருப்பை கர்த்தர் மாற்றி, அவனுக்கு உண்டாயிருந்த எல்லாவற்றையும் இரண்டத்தனையாய் ஆசீர்வதித்தார்' என்று யோபு 42:10ம் வசனத்தில் வாசிக்கிறோம். வெட்கத்திற்கு பதிலாக இரண்டத்தனையான பலன் யோபுவுக்கு வந்ததுபோலவே கர்த்தர் உங்களுக்கும் செய்வார்.



### யோபுவின் வாழ்க்கையில் இரண்டு மடங்கு ஆசீர்வாதம் வர என்ன காரணம்?

## இழப்பிலும் தேவனைத் துதித்தார்

எல்லா நிலைமையிலும் கர்த்தரைத் துதிக்கும் போது வெட்கத்திற்கு பதிலாக இரண்டத்தனையான பலன் வரும். யோபு தன்னுடைய இழப்பிலும் தேவனை துதித்ததினால் தான் அந்த பலன் உண்டாயிற்று. ஒரு இழப்பு, ஒரு பிரச்சனை, ஒரு அவமானம், நிந்தை வரும்போது நம்முடைய மனநிலை எப்படி இருக்கிறது என்று தேவன் நம் முகத்தைக் கவனித்துக் கொண்டே இருக்கிறார். யோபு தன் சொத்துக்களை, பிள்ளைகளை, சரீர சுகம் எல்லாவற்றையும் இழந்தார். இந்த நிலையில் சொந்தங்கள், பந்தங்கள், நண்பர்கள் என்று எல்லாரும் அவமானப்படுத்துகிறார்கள். சொந்த மனைவியும், இன்னும் என்ன கர்த்தர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர், கர்த்தரை தூஷித்து ஜீவனை விடும் என்று சொல்கிறாள். அவமானப்பட்ட நிலமையிலும், முகம் செத்துப்போன நிலமையிலும், யோபு பரிதாபமாக நிற்கிற சூழ்நிலையிலும் யோபின் நண்பர்கள் இரண்டு பேர் யோபின் வாயில் இருந்து என்ன வார்த்தை வரும் என்று யோபுவின் முகத்தை கவனிக்கிறார்கள்.

**"...கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான். இவை யெல்லாவற்றிலும் யோபு பாவஞ் செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறை சொல்லவுமில்லை" (யோபு 1:21,22)** என்று வேதம் சொல்கிறது. இதுவே தேவன் யோபுவை இரண்டு மடங்கு ஆசீர்வதிக்க காரணம். வெற்றி வரும்பொழுதெல்லாம் கர்த்தரை புகழுகிறோம், தேவனை மகிமைப்படுத்துகிறோம். ஆனால் ஒரு இழப்போ, ஒரு பிரச்சனையோ வந்துவிட்டால் நம்மை நீதிமான்களாகவும், தேவனை குற்றவாளியாகவும் நிறுத்தி நாம் அவருக்கு விரோதமாக முறுமுறுக்கிறோம். நாம் முறுமுறுக்கும்போது சாத்தான் மகிழ்ச்சியடைகிறான். கர்த்தர் துக்கப்பட்டு நம் நிமித்தம் வெட்கப்பட்டு போகிறார்.

என்ன இழப்பு வந்தாலும், எந்த விதமான நிந்தை, நெருக்கங்கள், அவமானங்கள், பாடுகள் வந்தாலும், என் இயேசு நல்லவர், ஒருநாளும் எனக்கு தீங்கு செய்ய

மாட்டார், கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று நீங்கள் துதிக்கும் போது இரண்டு மடங்கு ஆசீர்வாதத்தை இயேசுவால் கொடுக்க முடியும். ‘எல்லா காரியத்திலேயும் நீங்கள் ஸ்தோத்திரம் சொல்லுங்கள்’ (1 தெச. 5:18) என்று வசனம் சொல்கிறது.

## இழப்பிலும் கர்த்தரை விசுவாசித்தார்

**“அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்;...”** (யோபு 13:15) என்று யோபு சொல்கிறார். **“என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்” (யோபு 19:25).** அதுமாத்திரமல்ல, **“அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்;...” (யோபு 19:25)** அதான் யோபுவின் விசுவாசம். **“தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்” (யோபு 42:2)** என்பது அவரது விசுவாசம். என் ஆண்டவர் இயேசு எனக்காக எதையும் செய்வார் என்பதை அறிந்திருக்கிறேன். இந்த நிலமை மாறும், இந்த துக்கம் நீங்கும், இந்த தீங்கு விலகும், கர்த்தர் என்னை இரண்டு மடங்கு ஆசீர்வதித்து உயர்த்துவார், அவர் சகலத்தையும் செய்ய வல்லவர். அவர் செய்வதை ஒரு மனிதனும் தடுக்க முடியாது என்பதை நான் அறிந்திருக்கிறேன் என்று விசுவாசத்தை அறிக்கையிடுகிறார்.



நீங்கள் ஏன் சோர்ந்து போயிருக்கிறீர்கள். விசுவாச அறிக்கையிடுங்கள், விசுவாசத்தில் உறுதியாக இருங்கள். விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். ஒருநாளும் விசுவாசத்தில் தளர்ந்து போகாமல் இருங்கள். என்னை கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாக இருப்பேன் என்று யோபு கூறினார். விசுவாசிக்கிற உங்களுக்கு வெட்கத்திற்கு பதிலாக இரண்டத்தனையான பலன் வரும். இனி நீங்கள் வெட்கப்பட்டு போவதில்லை.

## இழப்பிலும் சிநேகிதருக்காக ஜெபம் செய்தார்

யோபு தன் விடுதலைக்காக, சுகத்திற்காக ஜெபிக்கவில்லை. அவரை குறை கூறின சிநேகிதர்களுக்காக ஜெபம் செய்தார். உங்கள் மேல் எனக்கு கோபம் வருகிறது, நீங்கள் உங்கள் வார்த்தையினால் என்னை துக்கப்படுத்துகிறீர்கள் என்பதாக (யோபு 42:7)ம் வசனத்தில் வாசிக்கிறோம். யோபுவின் நண்பர்கள் பேசுகிற பேச்சு தேவனை துக்கப்படுத்தி விட்டது. நீங்கள் வாயினால் பாவம் செய்து விட்டீர்கள். நான் உங்களை மன்னிக்க வேண்டுமானால், யோபு ஜெபம் பண்ண வேண்டும் என்பதாக சொல்கிறார். ‘‘நாங்கள் பாவம் செய்து விட்டோம், எங்கள் மீது தேவனுக்கு கோபம் வந்து விட்டது, நீ ஜெபித்தால் தேவன் எங்களுக்கு இரக்கம் செய்வார், அதனால் எங்களுக்காக நீ ஜெபம் பண்ணு’’ என்று யோபுவிடம் வருகிறார்கள்.

அவர் அவமானத்தின் மத்தியில், நிந்தை மத்தியில், வியாதி மத்தியில் இருக்கும் போதும், தனக்காக ஜெபிக்காமல், சிநேகிதர்களுக்காக ஜெபித்த ஜெபத்தைக் கேட்டு, தேவன் அவர்களை மன்னித்தார். இந்த உலகத்தில், நம்முடைய தேசத்தில் மந்திரவாதம் செய்வது, மனிதர்களை தெய்வமாக வணங்குவது என தேவனை துக்கப்படுத்துகிற அநேக காரியங்களை மக்கள் செய்து வருகிறார்கள். ஆண்டவரே, அவர்கள் அறியாமல் செய்கிறார்கள், அவர்களை மன்னித்து, எங்கள் ஜனத்தை ஆசீர்வதியும் என்று அவர்களுக்காக பாரம் எடுத்து ஜெபிக்கும் போது, தேவன் அவர்களை மன்னித்து அவர்களையும் இரட்சிப்பார். உங்களுக்கும் ஒரு விடுதலை உண்டாகும்.



**அன்பான வாலிபர்களே! ‘‘யோபுவை போல நானும் உம்மை துதிப்பேன், விசுவாசிப்பேன், மற்றவர்களுக்காக ஜெபம் பண்ணுவேன்’’ என்று உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். வெட்கத்திற்கு பதிலாக இரண்டத்தனையான பலன் வரும். இனி நீங்கள் வெட்கப்பட்டு போவதில்லை!**

# தன்னம்பிக்கை உறுதியான “கை”யாக மாறியது!

சாதனை: சமா




**இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! இந்த உலகத்தில் உள்ள எல்லா மனிதர்களுக்குள்ளும் எதாவது சாதிக்க வேண்டும் மற்றும் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் இருக்கும். ஆனால் அந்த ஆசை, ஆசையாகவே மட்டும் இருக்குமேயானால் நம்மால் வெற்றியடைய முடியாது. சாதிக்க வேண்டும் என்றால் முயற்சியும் செய்ய வேண்டும். அதற்கும் ஒரு படி மேலே சென்று போராட வேண்டும். அப்படி போராடி வெற்றிக்கண்ட ஒரு இளம் சாதனையாளரின் வாழ்க்கையின் போராட்ட சாதனை பயணம் உங்களுக்காக!!!**








Bethany Meilani Hamilton பிப்ரவரி 8, 1990ஆம் ஆண்டு பிறந்தார். தன்னுடைய மூன்றாம் வயதில் Surf செய்வது எப்படி என்று கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். பெத்தானி தன்னுடைய எட்டாம் வயதில் Surf செய்யத் தொடங்கினார். **Surfing** மேல் பெத்தானி அதிக ஆர்வம் கொண்டிருந்தார். அதில் சாதிக்கவும் விரும்பினார். நன்றாக சென்றுக் கொண்டிருந்த பெத்தானியின் வாழ்வில் சிறிதும் எதிர்பார்க்காத வகையில் மிகப்பெரிய விபத்தை சந்தித்தார்.

அக்டோபர் 31, 2003 அன்று, தன்னுடைய 13ம் வயதில் தனது தோழிகளுடன் **Surfing** செய்ய கடலுக்குச் சென்றார். பெத்தானி Surf Boat-ல் படுத்துக் கொண்டு தன்னுடைய தோழிகளுடன் பேசிக் கொண்டிருந்த போது சற்றும் எதிர்பாராத நேரத்தில் 14 அடி நீளமுள்ள புலி சுறா பெத்தானியை தாக்கியது. இந்த தாக்குதலில் பெத்தானியின் இடது கையை சுறா கடித்தது. அருகில் இருந்த தோழிகள் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். தன்னுடைய உடலில் இருந்த பாதி இரத்தத்தை இழந்ததோடு, தன்னுடைய இடது கையை முழுவதுமாக இழந்தார். தன்னுடைய கையை இழந்து விட்டோம், இனி நம்மால் எதுவும் சாதிக்க முடியாது என்று வீட்டில் முடங்கிவிடவில்லை. விபத்து நடந்து கொஞ்ச நாட்களுக்குள்ளேயே மீண்டும் **Surfing** செய்யத் தொடங்கினார். பல்வேறு போட்டிகளில் பங்கேற்று முதல் இடத்தைப் பிடித்தார். உலகின் சிறந்த சர்ஃபர்களில் ஒருவராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். 2012ம் ஆண்டு Rip Curl Cup-ல் பங்கேற்ற முதல் பெண் Surf Bethany ஆவார்.

2016ஆம் ஆண்டு பெத்தானி ஆறு முறை பெரிய போட்டிகளில் வெற்றிப் பெற்று ஆறு முறை உலக சாம்பியன் ஆனார். இன்று பெத்தானி புகழ்பெற்ற Surf, எழுத்தாளர் மற்றும் ஊக்கமளிக்கும் பேச்சாளர் என்று புகழ் பெற்று சாதனைபுரியும் அனைவருக்கும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளார்.





இதை வாசித்துக் கொண்டிருக்கும் நண்பர்களே, Bethany Hamilton தன்னுடைய இடது கை இழந்து விட்டதால் சோர்ந்து போய், Surf செய்வதை நிறுத்திக் கொள்ளாமல் போராடி வெற்றிக் கண்டார். இன்று நாம் வியந்து பார்க்கும் வகையில் சாதனையாளராக உள்ளார். நீங்கள் சாதிக்க நினைக்கும் ஏதோ ஒரு காரியத்தில் உங்களால் வெற்றிக்காண முடியவில்லையா? சோர்ந்துபோய் உள்ளீர்களா? சோர்ந்து போகாதீர்கள்! போராடுங்கள், முயற்சி செய்யுங்கள், வெற்றி காண எதிர்நீச்சல் போடுங்கள். ஒருநாள் வெற்றி உங்களை தழுவிக்கொள்ளும்.

எதிர்நீச்சல் போட தயாரா Friends!!


# எழுப்புதல் முழு இரவு ஜெபம்

### திருச்சியில்...

**ஜூன் 9,** வெள்ளிக்கிழமை

நேரம்: இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை

இடம் : சி.எஸ்.ஐ. தூய கிறிஸ்டோபர் ஆலயம் கண்டோன்மெண்ட், திருச்சி

தொடர்புக்கு:
9489775075
7010840765

### கரூரில்...

**ஜூன் 16,** வெள்ளிக்கிழமை

நேரம்: இரவு 9 மணி முதல் அதிகாலை 3 மணி வரை

இடம் : துதி மண்டபம், கரூர்

தொடர்புக்கு:
9489775075

செய்தியும் ஜெபமும் **சகோ. அவினாஷ்**



### காரைக்குடியில்...

**ஜூலை 21,** வெள்ளிக்கிழமை

நேரம்: இரவு 9 மணி முதல் அதிகாலை 3 மணி வரை

இடம்: CSI தெய்வீக மகிமையின் ஆலயம் கோட்டையூர்

செய்தியும் ஜெபமும்
**சகோ. சதீஷ்குமார்**
தொடர்புக்கு: 9750955548



# பெயெர்செபா



வேதாகம தேசங்கள்: கெத்சி கிளார்வின்

**அன்பு வாலிபர்களே! வேதாகம தேசங்கள் என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள சில தேசங்களையும் அதின் சிறப்புமிக்க பட்டணங்களையும் குறித்து பல சுவாரஸ்யமான தகவல்களை நீங்கள் வாசித்து அறிந்திருப்பீர்கள்! தொடர்ந்து இம்மாதம் நாம் பார்க்கவிருக்கும் தேசத்தின் பெயர் "பெயெர்செபா".**

## அறிமுகம்

- பெயெர்செபா ஓர் பழங்காலத்து பட்டணம்.
- வேதாகமத்தில் 16 முறை பெயெர்செபா என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ''பெயர்'' என்றால் ''கிணறு'', ''செபா'' என்றால் ''ஏழு'' என்று பொருள்படும். எனவே, பெயெர்செபா என்பதின் அர்த்தம் ''7வது கிணறு'' ஆகும்.
- இந்த தேசம் பாலஸ்தீன தேசத்தின் தென் எல்லையை சார்ந்தது.

## பெயெர்செபா பெயர் பெற்றதின் காரணம் யார் என்று உங்களுக்கு தெரியுமா?

அதற்கு காரணமானவர் நம் விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாம் ஆவார். இதை அறிந்துக் கொள்ள உங்கள் வேதாகமத்தில், ஆதியாகமம் 21:31-34 வரை உள்ள வேத பகுதியை எடுத்து வாசியுங்கள்.

## பெயெர்செபாவின் சிறப்பம்சங்கள்

- பெயெர்செபாவில் முதன்முதலில் குடியேறியவர் ஆபிரகாம் (ஆதி. 22:19).
- ஈசாக்கும் இவ்விடத்தில் துரவு ஒன்றை வெட்டித் தண்ணீர் கண்டதினிமித்தம் ''சேபா'' என்று பேரிட்டார். ஆகையால் அந்த ஊரின் பெர் இந்நாள் வரைக்கும் பெயெர்செபா என்னப்படுகிறது.
- ஈசாக்கின் மகனாகிய யாக்கோபும் இந்த பெயெர்செபாவில் குடியிருந்தார். பின்னர் பெயெர்செபாவிலிருந்து ஆரானுக்குப் பிரயாணம் பண்ணி தன் மாமனாகிய லாபான் வீட்டிற்கு சென்றார்.
- எகிப்தில் அடிமையாயிருந்த இஸ்ரவேலர்கள் மோசேயின் தலைமையில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தை நோக்கி பயணித்தனர். யோசுவா இஸ்ரவேலர்களுக்கு அத்தேசத்தைப் பங்கிட்டு கொடுக்கையில், யூதாவின் புத்திரருக்குச் சுதந்திரமாக கொடுத்தான்.
- சாமுவேலும் அவரது குமாரர்களும் பெயெர்செபாவில் நியாயாதிபதிகளாயிருந்தார்கள்.
- இஸ்ரவேலர்களின் சிறையிருப்பின் நாட்களுக்கு பின்பு நெகேமியாவின் நாட்களில் பெயெர்செபாவும் அதின் கிராமங்களும் குடியேற்றப்பட்டன.

**நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில் இத்தேசம் ஓர் செழிப்பான வளமிக்க தேசமாய் இன்னும் இருப்பதாய் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.**







சிறப்புக் கட்டுரை: ரவி

# பிரயாசம்

என் அன்புக்குரிய தம்பி தங்கைகளுக்கு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் நன்றாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். கர்த்தருக்குள் உங்களை வாழ்த்திக் கொண்டு, இம்மாதக் கட்டுரையைத் தொடங்குகிறேன். இக்கட்டுரையின் தலைப்பு ''பிரயாசப்பட்டார்'' (He Hard Worked / Labowed). **"பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும்." (2 தீமோ. 2:6)** என்று வாசிக்கிறோம். இவ்வசனத்தைப் பவுலடிகள் தன்னுடைய ஆவிக்குரிய குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு கிறிஸ்துவின் நாமத்திற்காக நாம் எப்படி ஓர் நல்லப் போர் சேவகனாக போராடிப் பிரயாசப்பட வேண்டும் என்பதை பின்னணியில் எழுதியதாகும். ஆம் நண்பர்களே, கிறிஸ்துவுக்கென்று நாம் ஜீவிக்கும்போது பல நேரங்களில் உபத்திரவங்களினூடாய் போக நேரிடும். அப்போஸ்தல நடபடிகள் புஸ்தகத்தை நீங்கள் வாசிக்கும் போது அப்போஸ்தலர்களும், சீஷர்களும் கிறிஸ்துவின் நாமத்திற்காக எத்தனைப் பாடுகள் பட்டார்கள் என்பதை நாம் பார்க்க முடியும்.

மாத்திரமல்ல, கிறிஸ்து இயேசு தாமே, நமக்காய் எத்தனை பாடுபட்டு சிலுவை மரணம் அடைந்தார் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர் அன்றுப்பட்ட பிரயாசத்தின் பலனாகவே, நாம் எல்லாரும் நம்முடைய பாவங்களிலிருந்து மீட்கப்பட்டு இன்று விசுவாசிகளாக இருக்கிறோம். அதோடுகூட அவருடைய பிரயாசத்தின் பலனாகவும், மரணபரியந்தம் தம்மை தாழ்த்தினபடியினாலும், **"தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, (தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரச்செய்து) ...எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி. 2:9-11)** என்பதாக வாசிக்கிறோம்.



பிரயாசம் நிச்சயம் பலன் கொடுக்கும் (Hard work yields results). அதுவும் கிறிஸ்துவுக்குள் படும் பிரயாசம் நிச்சயமாக பலன் கொடுக்கும். **"பிரயாசப்பட்டு (பயிரிடுகிறவன்) வேலை செய்கிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும்" (2 தீமோ. 2:6)** என்று சொல்கிறது. நீங்கள் பிரயாசப்படுகிறீர்களா? பள்ளி மாணவ, மாணவியர் உங்கள் பாடங்களில் சிறந்த தேர்ச்சிப் பெற பிரயாசப்படுகிறீர்களா?, கல்லூரி மாணவ, மாணவியர் உங்கள் கல்லூரி பாடங்களில் நல்ல தேர்ச்சிப் பெற்று பட்டம் பெற பிரயாசப்படுகிறீர்களா? நீங்கள் அப்படி பிரயாசப்படும்போது, அதற்கான பலன் நிச்சயமாக உங்களுக்கு கிடைக்கும் என்பதையே இவ்வசனம் நமக்கு உறுதிபடுத்துகிறது.

**இவற்றிற்கும் மேலாக, கிறிஸ்து இயேசுவுக்குள் ஓர் நல்ல சாட்சியாக வாழ நீங்கள் பிரயாசப்படுகிறீர்களா? ஆம் நண்பர்களே, ஒரு கிறிஸ்தவனாக நம்முடைய முதல் அழைப்பு மற்றும் கடமை என்னவென்றால், இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள சீஷனாக இருப்பது. அதற்காக பிரயாசப்படுங்கள். உங்கள் பள்ளி, கல்லூரி மற்றும் வேலையிடங்களில் நீங்கள் உங்கள் விசுவாசத்திற்காக பிரயாசப்பட நேரிடும். அதை நீங்கள் கஷ்டமாக எண்ணாமல் சூழ்நிலைகளாக அவற்றை எண்ணி கிறிஸ்துவுக்குள் மனநம்பிக்கையோடு நீங்கள் அதை எதிர்கொள்ளும்போது உங்களுடைய பிரயாசத்தின் பலனை உங்களுக்கு அருளிச் செய்ய தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார்.**

# எழுப்புதலை பற்ற வைப்போர் முகாம்

## கர்நாடகா




கடந்த மே மாதம் 3,4,5 ஆகிய தேதிகளில் கர்நாடக மாநிலத்திலிருந்து 1400 வாலிபர்கள் நாலுமாவடிக்கு வரவழைக்கப்பட்டு, எழுப்புதலைக் குறித்த தரிசனம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இம்முகாமில் ஜெப அபிஷேகம், யுத்த அபிஷேகம், தீர்க்கதரிசன அபிஷேகம், சுவிசேஷ அபிஷேகம் என்று 4 விதமான அபிஷேகத்தை வாலிபர்கள் பெற்று, எழுப்புதலை கர்நாடகாவில் பரவச்செய்வோம் என்ற தீர்மானத்துடன் கடந்து சென்றனர்.

சகோதரர் மோகன் சி. லாசரஸ் மற்றும் தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார் அவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தினார்.

சகோதரர் அன்பு மற்றும் பாஸ்டர் கங்காதர் அவர்கள் கன்னட மொழியில் மொழிபெயர்த்து உதவினார்கள்.

வந்திருந்த வாலிபர்களில் அநேகர் எழுப்புதல் அக்கினியை தங்கள் மாநிலத்திற்கு சுமந்து சென்றிருக்கிறார்கள்.

தேவனுக்கே மகிமை!












CAMP



வேதாகம கதாபாத்திரம்: பெனிட்டா



# ஏகூத்

வாசிக்க: நியா. 3:12-31

## அறிமுகம்

ஏகூத் கேராகின் மகன். இஸ்ரவேலின் இரண்டாவது நியாயாதிபதி. இவர் பென்யமீன் கோத்திரத்தை சேர்ந்தவர். இவர் இடது கை பழக்கமுள்ளவர். அந்த பழக்கம் தான் 18 வருட அடிமைத்தனத்தை ஒரேநாளில் திருப்பியது. ஒத்னியேலுக்கு பின் இஸ்ரவேல் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தபடியால், இம்முறை அம்மோன் புத்திரரையும், அமலேக்கியரையும் கூட்டிக் கொண்டு மோவாப் இவர்களை ஒடுக்கியது. பலமான பட்டணங்கள் பிடிக்கப்பட்டது, ஜனங்கள் மறுபடியும் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள். எனவே இவர்களை விடுவிக்க தேவன் வித்தியாசமான மனிதரை தெரிந்து கொண்டார். ஏகூத் என்பதற்கு மாட்சிமை என்று அர்த்தம்.

## சவால்கள் மற்றும் வெற்றிகள்

ஏகூத் யுத்தம் செய்ததாக வேதத்தில் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. நியாயாதிபதியாக எழும்பின ஏகூத் தனி மனிதனாக தன்னுடைய இடது கை பழக்கத்தைக் கொண்டு மோவாப் இராஜாவாகிய எக்லோனை வீழ்த்தினான்.

18 அங்குலம் இருபுறமும் கருக்குள்ள கத்தியை செய்து, அதை தன் வஸ்திரத்திற்குள் வலபுறம் இடுப்பில் கட்டி வைத்திருந்தார். காணிக்கைகளை எடுத்துக் கொண்டு, மோவாப் இராஜாவை சந்தித்து காணிக்கையை கொடுத்தார். இராஜாவை தனியாக அழைத்து தனது திட்டத்தை செயல்படுத்தினார். கண்ணிமைக்கும் நேரத்தில் இஸ்ரவேலின் பகைவன் தரையில் விழுந்து மாண்டு போனான்.

மோவாப் இராஜாவை கொன்றபின் சற்றும் தாமதிக்காமல், தீவிரமாய் செயல்பட்டு, எப்ராயீம் மலைக்கு ஓடிப்போய் எக்காளம் ஊதி, தன் ஜனங்களை ஆயத்தப்படுத்தினார். பகைவனாகிய மோவாப் இராஜாவை கர்த்தர் உங்கள் கையில் ஒப்புக் கொடுப்பார் என்று சொல்லி ஜனங்களை யுத்தத்திற்கு நேராக வழிநடத்தினார். அவனுடைய யுக்திகளினாலும், செயல்பாடுகளினாலும் தன்னிலும் பெலனாகிய மோவாபுக்குள் புகுந்து 10,000 பேரை முறியடித்தான். மோவாப் இவர்களுக்கு கீழ் தாழ்த்தப்பட்டது. 80 வருடம் தேசம் அமைதலாக இருந்தது. இஸ்ரவேலர்களின் காலத்தில் அதிக வருடம் அமைதலாக இருந்த காலம் ஏகூத்தின் காலம்.

## நாம் கற்றுக்கொள்ளும் பாடம்

ஏகூத் இடது கை பழக்கமுள்ளவராக இருந்தும் தேவனுக்காக பெரிய காரியத்தை செய்ய வேண்டும் என்று முயற்சித்து, 18 வருட அடிமைத்தனத்தை ஒரே நாளில் விடுவித்தது போல, நம் குறைகளை பார்க்காமல், அந்த குறையையே சாதனையாக மாற்ற முயற்சிப்போம்.

ஏகூத் தீவிரமாய் செயல்பட்டதினால் தன் தேசத்தையும், தன் ஜனங்களையும் 18 வருட கால மோவாபியரின் ஒடுக்குதலிலிருந்து விடுவித்தார். அதுபோல நாமும் தீவிரமாய் செய்ய வேண்டியவற்றை தீவிரமாய் செய்ய வேண்டும்.




**நல்ல யுக்திகளை கையாண்டு, மோவாபியரின் ஆதிக்கத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களுக்கு 80 வருட காலம் அமைதியும், சமாதானமும் கிடைக்க அசாத்தியமான காரியங்களை செய்தார். அதுபோல நாமும் தேவனுக்கு கீழ்ப்படிந்து அவரை சார்ந்து, விசுவாசத்தோடு செயல்பட்டால், ஏகூத் போல நாமும் அசாத்தியமான காரியங்களை செய்யலாம்.**




# தந்தையர் தினம்



**அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள ஸ்போகேனில் வசித்து வந்த அமெரிக்க உள்நாட்டுப் போர் வீரர் வில்லியம் ஜாக்சன் ஸ்மார்ட்டின் மகள் சோனோரா தான் தந்தையர் தினம் உருவாக காரணமாக இருந்தவர். 1966 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையை தந்தையர் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.**



பணக்கஷ்டமும், மனக்கஷ்டமும் தனக்கு இருந்தாலும் வெளியே காட்டிக்கொள்ளாமல் குடும்பத்தின் சந்தோஷத்துக்காக பாரமான சுமையை சுகமாக சுமந்து கொண்டிருப்பவர் தந்தை.

எத்தனை இன்னல்கள் பட்டாலும், அனைத்தையும் தன் தோள்களில் சுமந்து இரவு பகல் தூக்கமின்றி பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குபவர்கள் தந்தையர்கள்.

ஒரு குடும்பத்தைக் கட்டி எழுப்புவது மட்டுமின்றி பொருளாதாரம், கல்வி, வாழ்க்கைத்தரம் என அனைத்தையும் பெற்றுத்தந்து பாதுகாப்பதும் தந்தையே.

ஒரு குடும்பத்தில் தந்தை மட்டும் பணம் சம்பாதிக்கும் ஒருவராக இருக்கும் பட்சத்தில் அவர்கள் படும் கஷ்டங்களையும், சுமைகளையும் நாம் புரிந்து கொள்ளுவது மிகவும் கடினம்.

கண்டிப்பானவர், வளைந்து கொடுக்காதவர், கர்வம் கொண்டவர் போன்ற பேர்களையும் ஒரு தந்தை சுமக்க வேண்டியிருக்கிறது.

ஒரு தாயானவள், தான் பார்த்து ரசித்த இவ்வுலகைத் தன் பிள்ளைகளும் பார்த்து ரசிக்க வேண்டும் என்று எண்ணுபவள். ஆனால் தான் பார்த்து ரசிக்காததைக் கூட தன் குழந்தைகள் பார்க்க வேண்டும் என்று எண்ணி அவர்களைத் தன் தோள் மீது சுமப்பவரே தந்தை.

நாம் ஆசையாய் கேட்பதை எப்படியாவது கஷ்டப்பட்டு நிறைவேற்றி தருபவர் தந்தையே. குழந்தைகளாகிய நம்முடைய ஆனந்தத்திற்காக தன் ஆசையைத் துறந்து தியாகம் செய்பவர் தந்தையே.

தந்தை உங்கள் அருகில் இல்லை என்றால், இன்றைய தினம் அவரை நினைவு கூர்ந்து வாழ்த்துவதே நீங்கள் அவருக்குக் கொடுக்கும் விலைமதிப்பில்லா பரிசு. உலகெங்கும் வாழும் அனைத்து தந்தையர்களுக்கும் இனிய தந்தையர் தின நல் வாழ்த்துக்கள்.

**நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான் (நீதி. 23:24)**

# ஜெபக்

## சுற்றுச்சூழல்

- உலகில் அதிக காற்று மாசடைந்த 30 நகரங்களில் 21 நகரங்கள் இந்தியாவில் உள்ளன.
- தொழிற்சாலை கழிவுகளினால் 51% காற்று மாசு ஏற்படுகிறது.
- வாகனங்களினால் 27% காற்று மாசு ஏற்படுகிறது.
- காற்று மாசுபடுவதினால் சுமார் 12 லட்சம் பேர் இறக்கின்றனர்.



### ஜெபக்குறிப்பு

1. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் மற்றும் தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் அவர்களுக்கு தேவன் நல்ல ஞானம், பாதுகாப்பு கொடுக்க ஜெபிப்போம்.
2. இயற்கை மற்றும் சுற்றுச்சூழலைப் பாதிக்கிற எந்த சட்டத்தையும் அரசாங்கம் கொண்டு வராமலிருக்க ஜெபிப்போம்.
3. தொழிற்சாலைகளிலிருந்து சட்ட விரோதமாக வெளியேறும் கழிவுகள் மற்றும் புகையினால் நீர்நிலைகள் மற்றும் சுவாசிக்கும் காற்று மாசுபடுவதை தடுக்க, அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.
4. காற்று மாசுபாட்டினால் ஏற்படும் நோய்கள் மற்றும் இறப்புகள் நடைபெறாமல், மக்களுக்கு நல்ல இயற்கை சூழல் உண்டாக ஜெபிப்போம்.
5. இந்தியாவில் காற்று மாசு ஏற்படாமல் பாதுகாக்கப்படவும், அதிக மாசு வெளிப்படுத்தும் தொழிற்சாலைகளின் மீது அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கவும் ஜெபிப்போம்.

## கல்வித்துறை

- இந்தியாவில் 14 லட்சம் பள்ளிகளும், 410 சர்வதேச பள்ளிகளும் உள்ளன.
- இந்தியாவில் 900 பல்கலைக்கழகங்களும், 40,000 கல்லூரிகளும் இருக்கின்றன.
- இதில் சுமார் 32 கோடி மாணவ, மாணவியர்கள் படிக்கின்றனர்.
- இந்தியாவில் 6 வயது முதல், 14 வயதுள்ள சிறுவர், சிறுமியர்கள் சுமார் 3.5 கோடி பேர் பள்ளிகளுக்கு சென்றதேயில்லை.
- இதில் 5 வயது முதல் 9 வயது வரை உள்ள 53% பெண் குழந்தைகள் படிப்பறிவில்லாதவர்களாக உள்ளனர்.
- இந்தியாவில் 60% பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்புகளுக்கு சராசரியாக 2 ஆசிரியர்களுக்கும் குறைவாகவே உள்ளனர்.

### ஜெபக்குறிப்பு

1. ஜூன் மாதம் பள்ளிகள் திறந்து பள்ளிக்கு செல்லும் ஒவ்வொரு பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
2. பள்ளிகளில் தகுந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு தரமான கல்வி வழங்கப் பெற ஜெபிப்போம்.
3. இந்தியாவில் பள்ளிக்கு செல்லாத சுமார் 3.5 கோடி சிறுவர், சிறுமியர்கள் கல்வி கற்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.
4. பள்ளிகள் சீரமைக்கப்படவும், பள்ளிகளில் மாணவர்களுக்கு கல்விக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவும் ஜெபிப்போம்.
5. கல்விக் கட்டணம் செலுத்த முடியாமல் தரமான கல்வி கற்க முடியாமல் தவிக்கும் மாணவ, மாணவியருக்கு அரசு உதவித் தொகைகள் வழங்க ஜெபிப்போம்.

# கையேடு

ஜூன் 2023

ஜெபம்: பெனிட்டா

## விவசாயம்



- இந்தியாவில் சுமார் 11.8 கோடி விவசாயிகளும், விவசாயத்தை சார்ந்த தொழிலாளர்கள் 3.6 கோடி பேர் இருக்கின்றனர்.
- சுமார் 39.4 கோடி ஏக்கர் விவசாய நிலங்கள் இருக்கின்றன. விவசாயிகள் சுமார் 1 லட்சம் கடனுடன் இருக்கிறார்கள்.
- ஒரு ஆண்டில் சுமார் 11 ஆயிரம் முதல் 12 ஆயிரம் பேர் வரை தற்கொலை செய்கிறார்கள்.
- இந்தியாவில் ஒரு நாளில் 31 விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.
- இந்தியாவில் சுமார் 1500டன் தானியங்கள் வீணாக்கப்படுகின்றன.

### ஜெபக்குறிப்பு

1. இந்தியாவில் விவசாயம் செய்து வரும் ஒவ்வொரு விவசாயிகளும், விவசாய நிலங்களும் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.
2. கடன் பாரத்தால் சிக்கி தவிக்கும் விவசாயிகள் அதிலிருந்து விடுபடவும், கடனை திரும்ப செலுத்த வாசல்கள் திறக்கப்படவும் ஜெபிப்போம்.
3. கடன் பாரத்தினால், விவசாயம் நலிவுற்று போனதால் தற்கொலை செய்து மரிக்கும் விவசாயிகளின் மனக்கண்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.
4. விவசாயத்தை நம்பி விளைநிலங்களில் பயிரிடப்பட்டு காத்திருக்கும் விவசாயிகளின் விளைச்சல்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.
5. தானியங்களை வீணாக்காமல் நல்ல சேமிப்பு கிடங்குகள் அமைத்து சேமித்து வைக்க அரசு ஆவன செய்ய ஜெபிப்போம்.

## மன அழுத்தம்

- இந்தியாவில் சுமார் 56 மில்லியன் பேர் மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- ஒவ்வொரு ஆண்டும் 2 லட்சம் பேர் மன அழுத்தத்தினால் தற்கொலை செய்கின்றனர்.
- சர்வதேச நிறுவனத்தின் ஆய்வறிக்கையின்படி, இந்தியாவில் 1 லட்சம் பேருக்கு 3 மனநல மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர்.
- இந்தியாவில் 15 வயது முதல் 24 வயது வரையுள்ள 7 பேர்களில் ஒருவர் மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு எந்த ஒரு காரியத்தையும் செய்ய ஆர்வமற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.



### ஜெபக்குறிப்பு

1. மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 56 மில்லியன் பேர் விடுதலை பெற்று, தங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக கழிக்கவும் ஜெபிப்போம்.
2. மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தவறான முடிவுகளை எடுக்காதபடி ஜெபிப்போம்.
3. மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க போதுமான மனநல மருத்துவர்கள் நியமிக்கப்பட ஜெபிப்போம்.
4. இளம் தலைமுறையினரை அதிகமாக தாக்கி, தங்களுடைய எதிர்காலத்தை கேள்விக்குறியாக்க, சாத்தான் போடும் திட்டங்கள் அபத்தமாக்கப்பட ஜெபிப்போம்.
5. மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல ஆலோசனை மையங்கள், ஆலோசகர்கள் நியமிக்கப்பட ஜெபிப்போம்.

சிந்தனை சிதறல்: பெனிட்டா

# சீமோன் பேதுரு




இயேசு கெனேசரேத்து கடலருகே நின்றுக் கொண்டிருந்த போது, வசனத்தைக் கேட்க ஆவலாய் ஜனங்கள் இயேசுவிடம் வந்தனர். கடலின் கரையில் வலைகளை அலசிக் கொண்டிருந்த சீமோன் பேதுருவின் படகை கேட்டு வாங்கி, அந்த படகில் ஏறி நின்று ஜனங்களுக்கு பிரசங்கம் பண்ணினார். போதகம் பண்ணி முடித்த பின்பு சீமோன் பேதுருவை நோக்கி, ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய் உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். பேதுரு தலைமுறை தலைமுறையாக மீன்பிடி தொழிலை செய்பவர். எங்கு, எப்போது, எந்த இடத்தில் மீன்கள் இருக்கும் என்று நன்றாக அறிந்தவர். இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் ஒரு சின்ன மீனைக் கூட அவரால் பிடிக்க முடியவில்லை. இதையறிந்து தான் இயேசு ஆழத்திலே போடுங்கள் என்று சொன்னார். **“அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்” (லூக்கா 5:5).** நடந்தது என்ன தெரியுமா? தேவன் சொன்ன வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததினால், **“...தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள்” (லூக்கா 5: 1-6).**

**அன்பான வாலிபர்களே! நம்முடைய பிரயாசத்தாலும் அனுபவத்தாலும் முடியாதது தேவனால் முடியும். கர்த்தர் வார்த்தைக்கு கீழ்ப்படியும் போது அவர் நம் பிரயாசத்தை ஆசீர்வதிப்பார்!**

# ஆகார்

சாராய்க்கு குழந்தை இல்லாததால் அவசரப்பட்டு அடிமைப் பெண்ணாகிய ஆகாரை ஆபிரகாமுக்கு மனைவியாகக் கொடுத்து, ஆபிரகாம் மூலம் ஆகார் கர்ப்பவதியானாள். இதனால் ஆகார் தன் நாச்சியாரை அற்பமாக எண்ணினாள். இதை சாராளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை, அடிமைப்பெண்ணை கொடுமையாக நடத்தியதால், ஆகார் எல்லாவற்றையும் விட்டு வனாந்தரத்திற்கு ஓடிப்போகிறாள். வனாந்தரத்திலே ஆகாரைச் சந்தித்த கர்த்தருடைய தூதனானவர் அவளை விசாரித்த போது, நான் என் நாச்சியாரை விட்டு ஓடிப்போகிறேன் என்று சொன்னாள். கர்த்தருடைய தூதன் நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப் போய், அவளுக்கு அடங்கியிரு என்று சொல்லி அனுப்புகிறார். அவள் கர்ப்பவதியாயிருப்பதினால் அவள் பிரயாசத்தை கர்த்தர் பார்க்கிறார். அவளுக்குப் பிறக்க போகும் குழந்தைக்கு இஸ்மவேல் என்ற பெயரைக் கொடுத்தார் (ஆதியாகமம் 16ம் அதிகாரம்).



**அன்பான வாலிபர்களே! இன்றைக்கு நீங்களும் கூட ஆகாரைப் போல ஏதோ ஒரு காரியத்தில் பிரயாசப்படுகிறீர்களா? கர்த்தரின் கரத்தில் அடங்கியிருக்கும் போது, உங்களுடைய பிரயாசத்தையும் கர்த்தர் பார்த்து உங்களுக்கு ஏற்ற பிரதி பலனைக் கொடுப்பார்!**

## ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள்



ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் பவுலுக்கு விசேஷித்த சிநேகிதர்கள். இவர்கள் பவுலுக்கு அநேக உதவிகளைச் செய்திருக்கிறார்கள். இவர்கள் ரோமாபுரியில் வசித்தவர்கள். ரோமாபுரியில் ஏற்பட்ட ஒரு சட்டத்தினால் அங்கிருந்து வெளியேறி கொரிந்து பட்டணத்தில் குடியேறினார்கள் (அப். 18:2). கொரிந்து பட்டணத்தில் பவுல் ஊழியம் செய்ய வந்த போது, அவர்களோடு இணைந்து கூடாரம் பின்னுகிற தொழிலைச் செய்து வந்தார். ''கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன்வேலையாட்கள்'' என்று இவர்களைக் குறித்து பவுல் கூறுகிறார். உடன் வேலையாட்கள் மட்டுமல்லாமல், அதிகமாக ஊழியமும் செய்திருக்கிறார்கள். பவுலின் பிராணனுக்காக அவர்கள் இருவரும் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள். பவுலின் ஜீவனைப் பாதுகாப்பதற்காக இவர்கள் பல ஆபத்துக்களை சந்தித்தார்கள். உபத்திரவங்கள், போராட்டங்கள் ஆகியவற்றிற்கு மத்தியிலும் அவர்கள் பவுலுக்குப் பாதுகாப்பாயிருந்து பவுலின் ஜீவனை தப்புவிக்க அதிகமாக பிரயாசப்பட்டார்கள். கொரிந்து பட்டணத்தில் ஊழியம் செய்த நாட்களில் அதிக எதிர்ப்பு உண்டான போது, பவுலுக்கு அடைக்கலம் கொடுத்து பவுலைத் தங்களோடு சேர்த்துக் கொண்டார்கள்.

**அன்பான வாலிபர்களே! இந்த தம்பதியரைப் பாருங்கள். ஒரு ஊழியக்காரரின் ஜீவனைப் பாதுகாப்பதற்காக தங்கள் ஜீவனைக் கொடுத்தாவது காப்பாற்ற வேண்டும் என்று பிரயாசப்பட்டதைப் போல், நீங்கள் இன்றைக்கு உபத்திரவங்கள், பாடுகள் மத்தியில் ஊழியம் செய்ய முடியாமல் இருக்கும் ஊழியர்களுக்காக ஏதாவது பிரயாசம் எடுக்கிறீர்களா?**

## மார்த்தாள்

பெத்தானியாவில் இருக்கும் மார்த்தாள், மரியாள் லாசரு வீட்டிற்கு இயேசு வருகிறார். இயேசு இவர்கள் குடும்பத்தை மிகவும் நேசித்தார். மார்த்தாள் வீட்டுக் காரியங்களில் மிகவும் பொறுப்புள்ளவளாக இருந்தாள். இயேசு வந்த போது, அவரை உற்சாகமாக வரவேற்கிறாள். நம் வீட்டிற்கு இயேசு வந்திருக்கிறார், அவரை உபசரிக்க வேண்டும் என்று பல பிரயாசங்களை எடுக்கிறாள். இயேசுவை கவனிக்க வேண்டும், இன்னொரு பக்கம் ருசியான உணவு வகைகளை சமைக்க வேண்டும் என்று பரபரப்பாக வேலை செய்து கொண்டிருக்கும் போது, 'நான் இவ்வளவு பிரயாசப்பட்டு வேலை செய்து கொண்டிருக்கிறேன், மரியாள் எந்த கவலையும் இல்லாமல் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருக்கிறாளே என்று தன் சகோதரியைக் குறித்து இயேசுவிடம் குற்றம் சாட்டுகிறாள். என் சகோதரி என்னைத் தனியாக வேலை செய்ய விட்டு விட்டதை நீங்கள் பார்க்கவில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்கு சொல்லுங்கள் (லூக்கா 10:40) என்று கடுமையான வார்த்தைகளால் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறாள். ஆனால் இயேசு, நீ நிறைய வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு பிரயாசப்படுகிறாய், கொஞ்சம் இருந்தால் போதும் என்று மரியாள் மிகச் சிறந்ததை தேர்ந்தெடுத்துக் கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்படாது என்று கூறினார் (லுக்கா 10:41,42).

**அன்பான வாலிபர்களே! மார்த்தாளைப் போல, எல்லா காரியங்களிலும் பிரயாசப்படுவதை விட, மரியாளைப் போல நல்ல காரியத்திற்காக தங்கள் முழு பிரயாசத்தையும் கொடுக்கும் போது. மிகச் சிறந்த பங்கை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்!**



# Revival IGNiTERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த

**ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!**

## EVERY 1ST SUNDAY (4TH JUNE)

**MUMBAI – DHARAVI (5PM – 8PM)**
Gethsemane Prayer Centre
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
Gethsamane Prayer Center,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
Gethsamane Prayer Center,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
Gethsamane Prayer Center,
Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj College Rd. 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
Gethsamane Prayer Center,
Sekihnah Mahal,
Mullai Nagar.
9750955548 | 8344949555

## EVERY 2ND SATURDAY (10TH JUNE

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21,
Nethaji Road, Railway Line
Pulikeshi Nagar, Frazer Town.
Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
American College Higher Secondary School,
AC School
Backside to Arumugam Hotel,
Tallakulam Bus Stop.
9750955548 | 9344759316

## EVERY 2ND SUNDAY (11TH JUNE)

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MUMBAI - THANE (4PM – 6:30PM)**
9004882470

**POLLACHI (3PM TO 6PM)**
Gethsamane Prayer Center,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANJAVUR (3PM)**
Gethsamane Prayer Center,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677859766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
Gethsamane Prayer Center,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Gethsamane Prayer Center,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary
School Mela Sathankulam.
9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
Gethsamane Prayer Center,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3RD SUNDAY (18TH JUNE)

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
Gethsamane Prayer Center,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
Gethsamane Prayer Center,
22A, 1st Floor Thennur High
Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via)
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God,
Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
Gethsamane Prayer Center,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
Gethsamane Prayer Center,
MBT Road,
Navalpur.
9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
Gethsamane Prayer Center,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
Gethsamane Prayer Center,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
Gethsamane Prayer Center,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

**DINDUGAL (3PM TO 6PM)**
Sophia School, Govt Hospital
Emergency Block opp
9043422612 | 9715495621

**CHITTOOR (3PM TO 6PM)**
St. Lukes Telugu Church
9487734603

## EVERY 4TH SATURDAY (24TH JUNE)

**PERAMBALUR (5PM -8PM)**
Gethsamane Prayer Center,
M K Complex, 71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY (25TH JUNE)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
Gethsamane Prayer Center,
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3 PM – 5PM)**
Gethsamane Prayer Center,
Near Arun Hospital
Royakottai Road.
9962085523 | 9524999711

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி
YouTube
Comforter DIGITAL CHANNEL
Sathiyam
காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.
வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல்
இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 25th JUNE
TIME: 3:00 PM - 5:00 PM
IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS
TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK
ON LAST SUNDAY OF EVERY MONTH




தெரிந்துக் கொள்: கிருபா

# கண்கள்

தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி அவனுக்கு ஜீவாத்மாவை அளித்தார் (ஆதி. 2:7). தேவன் தமது சித்தத்தின்படி படைத்த மனிதனின் ஒவ்வொரு அவயவமும் தனித்தன்மை வாய்ந்தது. சரீரத்தில் அவயங்கள் பல இருப்பினும் அவை அனைத்தும் ஒரே சரீரத்திற்கு தங்கள் வேலையைச் செய்கின்றன (I கொரி. 12:18-22). மனிதனின் சரீரத்திலுள்ள அவயவங்கள் அவனது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அல்லது வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகிறது. எனவே தான் இயேசு மனிதனின் முழுச் சரீரமும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் ஏதேனும் ஒரு அவயவம் கெட்டுப்போவது நலமாயிருக்கும் என்றார் (மத். 5:29,30). ஒவ்வொரு அவயவம் பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்களையும் நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் அதன் பங்கு பற்றியும் சற்று தியானிப்போம்.

தேவன் படைத்த காடு, மலை, பள்ளத்தாக்குகள் தாவரங்களின் அழகைப் பார்த்து ரசிக்கையில், அவற்றின் அழகை எவ்வாறு கண்டு ரசிக்க இயலுகிறது என்று வியப்படைந்தது உண்டா? தேவனுடைய படைப்புகளின் எழில்மிகு தோற்றத்தினை மனிதன் கண்டு உணர்வதற்கு உதவும் முக்கிய உறுப்பு கண். மனிதனுக்கு இரண்டு கண்களிருந்தும் அவை ஒரே தளத்தில் அமைந்து ஒரே முப்பரிமாண உருவத்தைக் காண உதவுகிறது. இது Binocular Vision என்றழைக்கப்படும். ஒரு கண்ணின் அளவு 24.2 மி.மீ × 22.0–24.8 மி.மீ. மனித கண்களின் $1/6^{th}$ பகுதியில் Corneaவும் (கருவிழி) $5/6^{th}$ பகுதியில் Scleraவும் (விழிவெண்திரை) உள்ளது. இவ்விரு பகுதிகளுக்கும் இடையில் lens (கண் வில்லை) உள்ளது. கண்ணின் உட்பகுதியில் Vitamin A நிறைந்த Retina (விழித்திரை) உள்ளது. எனவே தான் கண்களின் ஆரோக்கியத்திற்கு Vitamin A சத்து அதிகமுள்ள பப்பாளி, கீரைகள், கேரட் போன்றவற்றை உட்கொள்ள வேண்டும் என்கின்றனர்.



Cornea மற்றும் lensக்கு நடுவில் aqueous humour என்னும் திரவமும் Lens மற்றும் Retinaக்கு நடுவில் Vitreous humour என்னும் திரவமும் உள்ளது. மனித கண்களின் நிறம் அதன் irisஐ (தசைப் பகுதி) பொறுத்தது. Iris கறுப்பு, பச்சை, நீலம், பழுப்பு என பல நிறங்களில் உண்டு. இதற்குக் காரணம் Melanin என்னும் நிறமியாகும். இந்தியர்கள் பெரும்பாலும் கறுப்பு நிறக் கண்கள் உடையவர்களாவர். ஒரு பொருளைக் காணும் போது அதிலிருந்து ஒளி Corneaவில் பட்டு பின் aqueous humourஐ ஊடுருவி pupil (irisன் நடுவிலுள்ள துளை) வழியாக Lensல் ஒளிச்சிதறலுக்குள்ளாகி, Vitreous humourஐ ஊடுருவி Retinaவில் குவிகிறது. பின்னர் இது Visual Impulseஆக மாறி optic nerve என்னும் நரம்பின் மூலம் மூளையின் occipital lobeல் உள்ள visual cortexக்கு சென்றடைகிறது. இவ்வாறு தான் மனிதனின் கண்கள் ஒளியின் உதவியுடன் பொருட்களின் உருவத்தைக் கணப்பொழுதில் படமெடுத்து உணர வைக்கிறது. Lacrimal glands மற்றும் Meibomian glandsலிருந்து சுரக்கும் கண்ணீர் கண்களை சுத்தப்படுத்துவதற்கும், உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் உதவுகிறது.

**சரி, இனி நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் கண்களின் முக்கியத்துவத்தைக் காண்போம்.**



பார்வை இல்லா மனிதர் கூட இயேசுவைக் கண்டுகொண்டால் நித்திய ஜீவனுக்கான வழியைக் கண்டு கொள்கின்றனர். பரமனின் உன்னத படைப்பினைக் கண்டு அவரை மகிமைப்படுத்த வாய்ப்பு பெற்றிருக்கும் நம்மில் எத்தனை பேர் நித்திய ஜீவனுக்கான வழியைக் (யோவான் 14:6) கண்டு கொண்டுள்ளோம்?

பழைய ஏற்பாட்டில் விபச்சாரஞ் செய்யாதிருப்பாயாக என்று தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசுவானவர் **"...ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று"** என்றார் **(மத். 5:28).** இது நம்முடைய கண்கள் எதிர்பாலரையோ அல்லது ஒரு நபரையோ பார்க்கும்போது, நமது பார்வையில் பரிசுத்தம் தேவை என்பதை கற்பிக்கிறது. பார்வையில் பரிசுத்தம் என்பது இச்சை நிறைந்த பார்வையை விலக்குவது மட்டுமல்ல. தேவனுடைய அளவுகோலில் மேட்டிமையான பார்வையும் (நீதி. 21:4, நீதி. 30:13), மற்றவர்களை அற்பமாய்ப் பார்க்கும் பார்வையும் பாவமே (ஆதி. 29:31). தேவனுடைய கண்கள் தாவீதைத் தன் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டது. தாவீது தேவனுடைய கற்பனைகளை மீறி பாவம் செய்திருப்பினும் (2 சாமுவேல் 11) நாத்தான் மூலம் உணர்த்தப்பட்ட போது உண்மையாக மனந்திரும்பி தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணினார் (சங்கீதம் 51). அவர் தேவனுக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்ததினிமித்தமும் தேவனுடைய ஜனங்கள் மீது அவர் கொண்டிருந்த உண்மையான அன்பினிமித்தமும், தேவனே அவரைக் குறித்து சாட்சியுங் கொடுத்து அவருடைய சந்ததியில் இஸ்ரவேலருக்கு இரட்சகரான இயேசுவை எழும்பப்பண்ணினார் (1 இராஜா. 15:5; அப். 13:22,23).

**தேவன் நம்மைக் காணும் போது, நம்வெளித்தோற்றம் மட்டுமின்றி, உள்ளான மனிதனும் (இருதயம், சிந்தனை) அவருடைய கண்களுக்கு முன்பாக பரிசுத்தமானதாகவும், பிரியமானதாகவும் இருக்க வேண்டும் என்று அனுதினமும் பிரயாசப்படுவோம்.**

**கண்களை பரிசுத்தமாக காத்துக் கொள்வோம்!**





சிறப்பு கட்டுரை: ஜெயசீலன்

# நிபந்தனைகளும் வாக்குத்தத்தங்களும்

அன்பு தம்பி, தங்கச்சி! இன்னுமொரு புதிய மாதத்தில் உங்களை சந்திக்கச் செய்த தேவாதி தேவனை மனதாரத் துதிக்கிறேன். தேர்வு முடிவுகளெல்லாம் வந்திருக்குமென எண்ணுகிறேன். புதிய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சேருவதற்கான தீவிர முயற்சியில் இருப்பீர்கள். வாழ்த்துக்கள்! உங்கள் முயற்சிகளை தேவன் வாய்க்கச் செய்வாராக! நிபந்தனைகளும் - வாக்குத்தத்தங்களும் இந்த வரிசையில் இம்மாத நாயகன் லோத்து.

## லோத்து

### உயிர் பிழைக்க ஓடு...

லோத் என்ற பெயருக்கு மறைக்கப்பட்டவர் அல்லது திரை என்று பொருள். இவர் ஆபிரகாமின் சகோதரனாகிய ஆரானின் குமாரன். தன் மனைவி, இரு பெண் பிள்ளைகளுடன் சோதோம் நகரத்தில் வாழ்ந்து வந்தார்.

**“சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்” (ஆதி. 13:13). “...சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும்,” (ஆதி. 18:20).** கர்த்தர் இந்தப பட்டணங்களை அழிக்க சித்தம் கொண்டார் (ஆதி. 19:13). இவர்கள் வாலிபர் முதல் கிழவர்கள் மட்டுமுள்ள ஜனங்கள் பாவத்திற்கு பயப்படாதவர்கள். பாவ இச்சையின் உச்சத்தில் வாழ்ந்தவர்கள் (ஆதி. 19:5). ஆனால் இந்தப் பொல்லாதவர்களின் கூட்டத்திலிருந்து, கர்த்தர் நீதிமானாகிய (2 பேதுரு 2:8) லோத்துவின் குடும்பத்தைப் பாதுகாத்து இரட்சிக்க விரும்பினார்.

சோதோமுக்கு கர்த்தரால் அனுப்பப்பட்ட தூதர்கள், லோத்தின் குடும்பத்தாரின் கைகளைப் பிடித்து, பட்டணத்திற்கு வெளியே கொண்டு வந்து, நீ உயிர் பிழைக்க வேண்டுமானால், **1. ஓடு, 2. பின்னிட்டுப் பாராதே, 3. எங்கும் நில்லாதே** என்ற மூன்று கட்டளைகளைத் தந்தார். லோத்துவின் குடும்பத்தார் உயிர் தப்ப ஓடினார்கள். லோத்துவின் மனைவியோ, தாங்கள் வாழ்ந்த அந்தப் பட்டணத்தை விட்டுப் பிரிய மனமின்றி, அந்தப் பட்டணத்திற்கு என்ன நடக்கிறதென்று பின்னிட்டுப் பார்த்தாள். மறுகணம் உப்புத்தூண் ஆனாள். லோத்து தன் இரண்டு மகள்களோடு எங்கும் நில்லாமல், திரும்பிப் பாராமல் ஓடிச் சென்று உயிர் பிழைத்தார்கள். லோத்துவின் வாழ்வு நமக்குச் சொல்வதென்ன?

### கண்களின் இச்சை

லோத்து, தன் பெரியப்பாவான ஆபிரகாமோடு கானான் தேசத்தில் வாழ்ந்து வந்தார். இவர்களின் ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால், அவர்கள் ஒரே இடத்தில் குடியிருக்க இடம் போதவில்லை. எனவே இருவரும் பிரிந்து செல்லத் தீர்மானித்தனர். லோத்து தன் கண்களை



ஏறெடுத்துப் பார்த்து, யோர்தான் நதியின் இரு புறத்திலுமுள்ள இடம் முழுவதும் நீர் வளமுள்ளதாய் இருக்கக் கண்டார். அது கர்த்தருடைய தோட்டத்தைப் (ஆதி. 13:10) போல் இருந்தது என தனது பார்வைக்கு நன்மையாகத் தெரிந்ததால், கிழக்கே பிரயாணம் பண்ணி, சோதோமுக்கு அருகில் கூடாரம் அமைத்துக் கொண்டார் லோத்து.

லோத்து, 'ஆண்டவரே, என்னை இம்மட்டும் நடத்தியவர் நீர். இப்பவும் நான் எந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டும். எங்கே குடியிருக்க வேண்டும் என்று ஆண்டவராகிய கர்த்தரிடம் ஆலோசனை கேட்கவில்லை'. மாறாக தன் கண்களுக்கு செழிப்பாய் இருந்த பகுதியைத் தானே தெரிந்து கொண்டார். ஆனால் அது பாவம் நிறைந்த பகுதியாயிருந்தது.



அன்பான என் பிள்ளைகளே! இந்த வாலிப நாட்களில் நீங்கள் பார்க்கும் இடமெல்லாம் செழிப்பாயிருப்பதுபோல் தான் இருக்கும். எதையும் கண்களால் பார்த்து தீர்மானிக்காதே. இறுதியில் உன் தேர்வு தவறுதலாய்ப் போய் விடும்.

காதல் என்ற மாய வலையில் சிக்கிக் கொள்ளாதே. உன் கண்களுக்கு அந்த வாலிபன், வசதியானவனாக, அழகானவனாக, சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறவனாக, உன்னைக் கடைசிவரை நேசிப்பவனாகத் தெரியும். தினமும் ஒரு பைக் கிலோ, காரிலோ வருவார். விலை உயர்ந்த பொருட்களைப் பயன்படுத்துவார். வசதியானவன். என்னை நன்றாகப் பார்த்துக் கொள்வான் என்று நினைத்துத் தடுமாறி விடாதே. யாரையும் கண்மூடித்தனமாக நம்பி, உன் வாழ்வைத் தொலைத்து விடாதே. உன் கண் திறக்கும்போது, நீ ஆதரவற்றவளாய்த் தெருவில் நின்றுக் கொண்டிருப்பாய். உன் வாழ்வு கேள்விக் குறியாகிப் போகும். மகளே உன் பெற்றோர் உன்னைக் குறித்து, ஒரு பெரிய கனவோடு காத்திருக்கிறார்கள். அவர்களின் ஆசையை சிதைத்து அவமானப்படுத்தி, தலைகுனிவை ஏற்படுத்தி விடாதே.

உன் படிப்பு, வேலை, திருமணம் போன்ற உன் காரியங்கள் எதுவானாலும், பேசும் தெய்வமாகிய ஆண்டவராகிய இயேசுவிடம், ''இயேசப்பா, நான் எந்த **Group** எடுக்க வேண்டும். எந்தக் கல்லூரியில் சேர வேண்டும். வெளிநாட்டிற்கு செல்லவா? வேண்டாமா? இந்த வரன் சரியாயிருக்குமா?'' என கேட்டுப் பாருங்கள். ஆலோசனைக் கர்த்தராகிய தேவன் உனக்கு நல் ஆலோசனைகளைத் தருவார். உனக்கு நல்வழி காட்டும் தகப்பன் அவர்.

ஒருவேளை தேர்வு முடிவுகள் எதிர்மறையாய் வந்திருக்கலாம். நீ எதிர்பார்த்த மதிப்பெண்கள் கிடைக்காமல் போயிருக்கலாம். நீ எதிர்பார்த்த படிப்பில் சேர முடியாமல் போகலாம். அதற்காக உன் வாழ்வை முடித்துக் கொள்ள நினைக்காதே. நீங்கள் சாகப்பிறந்தவர்கள் அல்ல. சாதிக்கப் பிறந்தவர்கள். உனக்கு முன்பாக ஒரு அழகான உலகத்தை ஆண்டவர் வைத்திருக்கிறார். அதில் நீ சிறப்பாய் வாழ, ஏராளமான நல்வழிகள் இருக்கிறது. வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இது. பயப்படாதே! தயங்காதே! தூசியைத் தட்டி சிறகடித்து எழும்பு. உனக்கு உதவி செய்ய ஆண்டவர் இயேசு காத்திருக்கிறார். உன் கண்களுக்கு அழகாய் இருக்கிறது என்று நம்பி விடாதே. அழகு ஆபத்தானது. செழிப்பு என வறட்சியைத் தெரிவு செய்யாதே.

## பாவத்திலிருந்து உயிர்பிழைக்க ஓடு

என் அன்புக் குழந்தைகளே, இந்த முழு உலகமும் எங்கும் பாவம், எதிலும் பாவம் என பாவத்தால் நிறைந்திருக்கிறது. வளர்ந்து விட்ட விஞ்ஞானம் இன்று நம்மைப் பாவத்திற்கு நேராகவே வழி நடத்துகிறது. இந்தப் பாவ உலகில் லோத்துவின் குடும்பத்தைத் தப்புவித்த கர்த்தர், உங்களையும் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். தன் வாலிபத்தின் இச்சையை நிறைவேற்றிக் கொள்ள தனக்கு ஒரு வாய்ப்பு வந்த போதும், இத்தனை பெரிய பொல்லாப்பை, என் தேவாதி தேவனுக்கு விரோதமாக செய்வதெப்படி? என தன் உடைகளை இழந்து ஓடினார் யோசேப்பு. அவரது 30ம் வயதில் அடிமையாய் சென்ற எகிப்து தேசத்திற்கு அதிபதியாய் கர்த்தர் உயர்த்தினார்.

**பாவத்தில் தடுமாறி விழுந்து தப்பும் வழியறியாது தவிக்கிறாயோ? யாருக்கும் பயனற்ற உப்புத் தூணாக இராதே. இது நீ எழும்ப வேண்டிய காலம். இதோ கர்த்தர் உன் கரம் பற்றியிருக்கிறார். எழும்பி செய்த பாவத்தைத் தேவ சமூகத்தில் அறிக்கையிட்டு, பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள். திரும்பிப் பார்க்காமல், ஜீவன் தப்ப, பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, இலக்கை நோக்கி ஓடு. நித்திய ஜீவன் எனும் பரிசு உனக்குக் காத்திருக்கிறது.**

# யோசனையில் பெரியவர்

# ஆயி பட்டணம்!

நிகழ்வு: கெத்சி கிளார்வின்

வேதாகமத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதிரான யுத்தங்களையும் போராட்டங்களையும், அவர்களுக்காக கர்த்தர் கையாண்ட யுக்திகளையும் இந்த "யோசனையில் பெரியவர்" என்னும் தொடரில் நாம் வாசித்து வருகிறோம். அந்த வரிசையில், இஸ்ரவேலர்கள் தோற்றுப்போன முதல் யுத்தத்தைப் பற்றியும், கர்த்தர் அவர்களுக்கு யோசனைகள் கொடுத்து அவர்களை வெற்றிப்பெற வைத்த அந்த நேர்த்தியான திட்டத்தையும் குறித்து இம்மாதம் நாம் பார்க்க போகிறோம்.

செங்கடலை கால்நடையாய் கடந்தவர்கள், வழிமறித்த யோர்தானை எளிதாய் கடந்தவர்கள், பலம் வாய்ந்த அடைக்கப்பட்ட எரிகோவின் மதிலையும் துதியினால் விழச் செய்தவர்கள், சொற்ப மக்கள் தொகை கொண்ட ஆயி பட்டணத்தில் வீழ்ந்த சம்பவம் உங்களுக்குத் தெரியுமா?

ஆம்! கர்த்தரின் மகத்தான கிரியைகளையும் வல்லமைகளையும் கண்ட இஸ்ரவேலர்கள், தாங்கள் வணங்கும் யேகோவா யார் என்பதையும், அவரின் எதிர்பார்ப்புகள் என்ன என்பதையும் அறியாததின் விளைவே ஆயி என்ற அந்த சின்ன பட்டணத்தில் தோற்க நேரிட்டது.

இச்சம்பவத்தில் ஆகானின் கீழ்ப்படியாமை ஓர் பக்கத்தில் இருப்பினும், முந்தைய வெற்றிகள் பல கண்டதில் கர்த்தரிடம் ஆலோசனை கேட்காமலேயே தங்களின் சுய பெலத்தில் ஆயியை மேற்கொள்ள யோசுவாவின் தலைமை முற்பட்டதால் அவர்களுக்கு கிடைத்தது ஆயி பட்டணத்தினரால் துரத்தப்பட்ட அனுபவமே! ஆகிலும் நம் கர்த்தர் கைவிடுபவரா? நிச்சயமாகவே இல்லை, அவர் இரக்கத்தில் சிறந்தவர்.

ஆம்! யோசுவா கர்த்தரிடம் இதைக் குறித்து விசாரித்து தங்களின் தவறை சரி செய்துக் கொண்ட பிற்பாடு யோசனையில் பெரியவரான நம் கர்த்தர் அவர்களுக்கு வியக்கத்தகும் வகையில் ஓர் திட்டத்தினைக் கொடுத்தார்.



## அத்திட்டமானது இஸ்ரவேலர்களை மூன்று குழுக்களாய் பிரித்து பதிவிருந்து யுத்தம் செய்வது

**முதல் குழு:** ஆயி பட்டணத்துக்கு பின்னாக பதிவிருக்கும்படி 30,000 பேரை இராத்திரியிலேயே தங்க வைத்தார்கள்.

**இரண்டாம் குழு:** யோசுவாவும் அவனோடே இருந்த சில யுத்த ஜனங்களும் ஆயிக்கு எதிரே சென்று பாளையமிறங்கினார்கள்.

**மூன்றாம் குழு:** பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவே – ஆயி பட்டணத்திற்கு மேலண்டையில் 5,000 பேரை பதிவிடை வைத்தார்கள்.

ஆயி பட்டணத்தினரை எளிதாய் மேற்கொண்டு விடலாம் என்று எண்ணி 3,000 நபர்களுடன் கர்த்தரிடம் எந்தவித ஆலோசனையோ உதவியோ கேட்காமல் சென்ற இஸ்ரவேலர்கள் அடிபட்டதும் கர்த்தரிடம் சரண் அடைந்தனர். சிறிய காரியம் தானே கர்த்தரிடம் கேட்க தேவையில்லை, நாமே பார்த்துக்கொள்ளுவோம், என்று தன்னிச்சையாக செயல்பட்டு அடிப்பட்டு துவண்டுபோன சூழ்நிலைகளில் உள்ளவரா நீங்கள்? நம் கர்த்தர் அனைத்தையும் அறிந்த ஆற்றல் உள்ளவர். அவர் சர்வஞானி என்பதை மறவாதீர்கள்!



3,000 நபர்களை வைத்து ஆயி பட்டணத்தை வீழ்த்திவிடலாம் என்று நினைத்த இஸ்ரவேலர்களுக்கு கர்த்தர் கொடுத்த யோசனை 30,000 நபர்களை வைத்து யுத்தம் செய்வதற்கான வழிமுறைகள். எத்தனை ஆச்சரியம்! ஆயி பட்டணத்தை இஸ்ரவேலர்கள் இம்முறை வென்றனர். அவர் யோசனையில் பெரியவர்!

பாருங்கள்! கர்த்தரின் யோசனைகள் ஆழமிக்கது. இதை வாசித்துக் கொண்டிருக்கும் வாலிபரே! ஓர் பட்டணத்தை சுதந்தரிக்க கர்த்தர் கையாண்ட யுக்திகளை கவனித்தீர்களா? அக்காலத்தில் மாம்சத்தோடு யுத்தம் நடந்தது. ஆனால், நாம் வசிக்கும் இக்கடைசி காலமோ, மாம்சத்தோடும் இரத்தத்தோடுமான யுத்தம் நமக்கு அல்ல; மாறாக சாத்தானின் வல்லமைகளுக்கு எதிரான யுத்தமே ஆகும்.

சற்று சிந்தியுங்கள்! தங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட பட்டணத்தை யோசுவாவின் சந்ததியினர் கர்த்தரின் வழிமுறைகளைக் கவனமாக பின்பற்றி, அதற்கு கீழ்ப்படிந்து தங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டனர். அதைப்போன்று இன்று நீ வசிக்கும் உனக்கு வாக்குப்பண்ணப்பட்ட உன் பட்டணம் உனக்கு சுதந்தரமாயிற்றா?

கர்த்தரின் எழுப்புதல் வீரர்களே! உங்கள் பகுதியை ஆக்கிரமித்துள்ள சத்துருவை இனங்கண்டு, யோசுவாவின் தலைமுறையினரைப் போல் குறிவைத்து தாக்குதல் நடத்தி, யுத்தத்தில் வெற்றிப் பெற்று, உங்களுக்கென்று சுதந்தரமாக்கிக் கொள்ள நீங்கள் இப்பொழுதே ஆயத்தப்படுங்கள்!

**“நாட்கள் பொல்லாதவைகளானதால்**
**காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்”** (எபே. 5:16).

# செய்திகள்!

## சீனாவை பின்னுக்கு தள்ளியது

## அமெரிக்காவில் பயிலும் வெளிநாட்டு மாணவர்கள் எண்ணிக்கையில் இந்தியா முதலிடம்!

## கடந்தாண்டை விட 11% அதிகரிப்பு!



அமெரிக்காவில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையில் கடந்தாண்டைக் காட்டிலும் 11 சதவீதம் அதிகரித்து, சீனாவை 2வது இடத்துக்கு பின்னுக்கு தள்ளி, இந்தியா முதலிடத்தை பிடித்துள்ளது.

சமீப காலமாக, இந்திய மாணவர்கள் ஏராளமானோர் வெளிநாடுகளுக்குச் சென்று உயர் கல்வி படிக்கின்றனர். அதிலும் குறிப்பாக அமெரிக்காவுக்கு சென்று படிக்க அதிக மாணவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுவரை, அமெரிக்காவில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களில் சீனாவைச் சேர்ந்தவர்கள் முதலிடத்திலும், இந்தியாவைச் சேர்ந்தவர்கள் 2வது இடத்திலும் இருந்து வந்தனர். ஆனால், அமெரிக்க குடியுரிமை மற்றும் புலம் பெயர்தல் சேவைப்பிரிவு (யு.எஸ்.சி.ஐ.எஸ்) சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, கடந்த கல்வியாண்டில், அமெரிக்காவில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையில் சீனாவை 2வது இடத்துக்கு பின்னுக்கு தள்ளி, இந்தியா முதலிடத்தை பிடித்துள்ளது.

சீனாவில் இருந்து வந்து படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை, முந்தைய ஆண்டைவிட குறைந்துள்ளது. இது 2021ம் ஆண்டில் 24,796 பேராக இருந்தது. ஆனால், இந்தியாவில் இருந்து வந்துள்ள மாணவர்கள் எண்ணிக்கை 64,300 அதாவது 11 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மழலையர் பள்ளி முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் 3,887 அதிகமாகி. 7.8 சதவீதம் உயர்ந்துள்ளது. மாணவர் பரிமாற்ற பார்வையாளர் திட்டத்தின் கீழ், கடந்த 2022ம் ஆண்டில் 7,683 பள்ளிகள் வெளிநாட்டு மாணவர்களை சேர்க்கும் தகுதி பெற்றுள்ளன. இது அதற்கு முந்தைய ஆண்டை விட 400 பள்ளிகள் குறைவாகும்.

கடந்த 2022ம் ஆண்டில் கலிபோர்னியாவில் மட்டும் 2,25,173 வெளிநாட்டு மாணவர்கள் படிக்க பதிவு செய்துள்ளனர். இது அமெரிக்காவில் ஒட்டு மொத்தமாக படிக்கும் வெளிநாட்டு மாணவர்களின் சதவீதத்தில் 16.5 சதவீதமாகும் என அந்த அறிக்கையில் கூறப்பட் டுள்ளது. - தினகரன், 3 மே 2023.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# வாலிபர் எழுப்புதல் கூடுகை





கடந்த மே மாதங்களில் சேலம், ஈரோடு மற்றும் அவிநாசி ஆகிய இடங்களில் வாலிபர் எழுப்புதல் கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். இதில் **1700 வாலிபர்கள்** கலந்துகொண்டார்கள். **60,000 கைப்பிரதிகளை** வாங்கி தனது மாவட்டங்களில் சுவிஷேசம் அறிவிக்க கடந்து சென்றுள்ளனர். மே மாதம் 1ஆம் தேதி தொழிலாளர்களுக்கான உழைக்கும் கரங்கள் என்ற கூடுகை திருப்பூர் மாவட்டத்தில் வைத்து நடத்தப்பட்டதில் **160 பேர்** கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இக்கூடுகையில் பங்குபெற்ற தொழிலாளர்கள் தங்களுடைய வேலை ஸ்தலத்தில் உண்மையாக இருக்கவும், திருப்பூர் மாவட்டத்தின் ஆசீர்வாதத்திற்காக திறப்பில் நின்று ஜெபிப்போம் என்றும் தீர்மானங்கள் எடுத்தனர். **12,500 கைப்பிரதிகளை** வாங்கி சென்றனர். இக்கூடுகையில் சகோதரர் அவினாஷ். சகோதரர் சதீஷ் குமார் செய்தி கொடுத்து வாலிபர்களுக்காக ஜெபங்களை ஏறெடுத்தனர். இக்கூடுகையில் பங்குபெற்ற வாலிபர்கள் எழுப்புதலுக்காக ஜெபிக்கவும், சுவிசேஷம் அறிவிக்கவும் தங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தனர். **தேவனுக்கே மகிமை!!**
















Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 05 -2023
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## நாகப்பட்டிணத்தில்...

நாள்: **ஜுலை 01**, சனிக்கிழமை

நேரம்: காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை

இடம்: சீயோன் ஜெப ஆலயம், தெற்கு வீதி, திருமாளம் தலைஞாயிறு, வேதாரண்யம் (TK), நாகப்பட்டிணம்

தொடர்புக்கு : 97876 42188 / 9442885315

செய்தியும் ஜெபமும்:
**சகோ. சதீஷ் குமார்**

## திருவாரூரில்...

நாள்: **ஜுலை 02**, ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மாலை 4 மணி முதல் 7 மணி வரை

இடம்:
பின்னர் அறிவிக்கப்படும்

தொடர்புக்கு : 99767 66322 / 73731 24750

செய்தியும் ஜெபமும்:
**சகோ. சதீஷ் குமார்**

## செங்கல்பட்டில்...

நாள்: **ஜுலை 9**, ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மாலை 4 மணி முதல் 8 மணி வரை

இடம்: SDA பள்ளி ஆடிட்டோரியம், செங்கல்பட்டு பழைய பேருந்து நிறுத்தம் அருகில், செங்கல்பட்டு

தொடர்புக்கு: 9488475315, 9597588831, 9710809626

செய்தியும் ஜெபமும்:
**சகோ. அவினாஷ்**

